# TNPSC தேர்வுகளுக்கான நடப்பு நிகழ்வுகள் - ஜனவரி 2016

## தமிழகம்

- **தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு தொண்டாற்றியவர்களுக்கான விருதுகளை** முதல்-அமைச்சர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.
  - **திருவள்ளுவர் விருது**- (2016-ம் ஆண்டு) - வி.ஜி.சந்தோஷம்;
  - **தந்தை பெரியார் விருது** - (2015-ம் ஆண்டு) - வி.ஆர்.வேங்கன்;
  - **அண்ணல் அம்பேத்கர் விருது**-(2015-ம் ஆண்டு) - எ.பொன்னுசாமி;
  - **பேரறிஞர் அண்ணா விருது** (2015-ம் ஆண்டு) பேராசிரியர் பர்வத ரெஜினா பாப்பா காரைக்குடி;
  - **பெருந்தலைவர் காமராசர் விருது** - (2015-ம் ஆண்டு)- மருத்துவர் ரா.வேங்கடசாமி காந்தி நிகேதன், தே. கல்லுப்பட்டி;
  - **மகாகவி பாரதியார் விருது** - (2015-ம் ஆண்டு) -கவிஞர் பொன்னடியான்;
  - **பாவேந்தர் பாரதிதாசன் விருது** - (2015-ம் ஆண்டு) - வீ.ரேணுகாதேவி, மதுரை;
  - **தமிழ்த்தென்றல் திரு.வி.க.** விருது - (2015-ம் ஆண்டு) - கி.வைத்தியநாதன் ஆசிரியர், தினமணி;
  - **முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் விருது** - (2015-ம் ஆண்டு) - ரா.கோ.ராசாராம் மதுரை.

- **தமிழகத்தில் அறநிலையத் துறைக் குச் சொந்தமான அனைத்து இந்து கோயில்களிலும் ஆடை கட்டுப் பாடு உத்தரவு 01-01-2016 முதல் அமலுக்கு வந்தது**. தமிழகம் முழுவதும் இந்து அறநிலையத் துறையின் கட்டுப் பாட்டில் 52 ஆயிரம் கோயில்கள் உள்ளன.

- தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு, கி.மு., 3ம் நூற்றாண்டிலேயே நடந்ததற்கான ஆதாரமாக, நாணயங்கள் வெளியிடப்பட்டுள்ளதாக, அதை ஆய்வு செய்த, தென்னிந்திய நாணயவியல் ஆய்வுக் கழகத் தலைவர், டாக்டர் இரா.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

- கன்னியாகுமரி கடலில் அமைந்துள்ள **திருவள்ளுவர் சிலையின் 16-ஆவது ஆண்டு விழா** நடைபெற்றது. 133 அடி உயரம் கொண்ட திருவள்ளுவர் சிலை

கடந்த 2000-ஆம் ஆண்டின் முதல் நாளன்று அப்போதைய முதல்வர் மு.கருணாநிதியால் திறந்துவைக்கப்பட்டது.

- செங்கல்பட்டை அடுத்த மஹிந்திரா வேர்ல்டு சிட்டியில் அமைந்துள்ள **இயற்கை எரிவாயு உற்பத்தி நிலையத்தை** மத்திய நிலக்கரித் துறை இணை அமைச்சர் பியூஷ் கோயல் சனிக்கிழமை தொடங்கி வைத்தார்.

- **தரமான விதைகளை வழங்குவதற்கான "அம்மா சீட்ஸ்', மாடியில் தோட்டம் அமைப்பதற்கான இடுபொருள்கள் அளிக்கும் திட்டமான "நீங்களே செய்து பாருங்கள்'** ஆகிய இரண்டு புதிய வேளாண் திட்டங்களை முதல்வர் ஜெயலலிதா தொடக்கி வைத்தார்.

- **வீரபாண்டிய கட்டபொம்மனின் 257-ஆவது பிறந்த தினத்தையொட்டி ,** 03-01-2016 அன்று தூத்துக்குடி மாவட்டம், பாஞ்சாலங்குறிச்சியில் உள்ள அவரது சிலைக்கு அரசு அதிகாரிகள், பல்வேறு அமைப்பினர் மாலை அணிவித்து மரியாதைச் செலுத்தினர்

- **சாரநாத்தின் கலாசார வரலாறு கி.மு.4- கி.பி. 6-ஆம் நூற்றாண்டுக்கு உள்பட்டது:** தொல்லியல் ஆய்வில் தகவல் : புத்தருக்கு ஞானம் கிடைத்த பின்னர், அவர் தனது முதல் பிரசங்கத்தை அரங்கேற்றிய புகழ்பெற்ற இடமான சாரநாத்தின் வரலாறு கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.மு.12-ஆம் நூற்றாண்டு வரையிலானது என்று கூறப்பட்டு வந்தது. இந்த நிலையில், சாரநாத் நகரின் உண்மையான வயதை உறுதிப்படுத்தும் நோக்கில், இந்திய தொல்லியல் ஆய்வுத் துறையினர் அண்மையில் ஆய்வு மேற்கொண்டனர். அதில், இந்த நகரின் கலாசார வரலாறு கி.மு.4-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.6-ஆம் நூற்றாண்டு வரையிலான காலகட்டதைச் சேர்ந்தது எனத் தெரிய வந்துள்ளது.

- காஞ்சிபுரம் மாவட்டம் மாமல்லபுரம் கடற்கரை கோயில் வளாகத்தில் **இந்திய நாட்டிய விழா** 5-01-2016 அன்று தொடங்கியது. இதில், பல்வேறு மாநிலங்களின் பாரம்பரிய நடனங்கள் மற்றும் நாட்டுப்புற கலைகளின் அரங்கேற்றம் நடைபெற்றன.

- **கரைவெட்டி பறவைகள் சரணாலயம் அமைந்துள்ள இடம்** - அரியலூர் மாவட்டம், திருமானூர்

- **திருமலைநாயக்கர் பிறந்த தினத்தையொட்டி, ஜனவரி 24-ஆம்** தேதியன்று மதுரையில் அரசு விழா நடத்தப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்.

- **உலகில் பார்க்க வேண்டிய இடங்களில், தமிழகத்திற்கு, 24வது இடம் கிடைத்து உள்ளது.**அமெரிக்காவின், 'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகை, 2016ம் பார்க்க வேண்டிய, 52 இடங்களை பட்டியலிட்டுள்ளது. இதில், மெக்சிகோ நாடு, முதலிடத்தைப் பிடித்துள்ளது; தமிழகம், 24வது இடத்தில் உள்ளது. இப்பட்டியலில், இந்தியாவில், தமிழகம் மட்டுமே இடம் பெற்றுள்ளது. மதுரை மீனாட்சியம்மன் கோவில், தஞ்சை பிரகதீஸ்வரர் கோவில், காரைக்குடி அருகே செட்டிநாடு பகுதியில் உள்ள, 18ம் நூற்றாண்டின் கட்டடங்கள், தமிழகத்திற்கு இந்த பெருமையை பெற்றுத் தந்துள்ளன.
- கர்ப்பிணி பெண்களுக்கான சித்த மருந்துகள் அடங்கிய **'அம்மா மகப்பேறு சஞ்சீவி'** பெட்டகம் வழங்கும் ரூ. 10 கோடி மதிப்பிலான திட்டத்தை 11-01-2016 அன்று, முதல்வர் ஜெயலலிதா தொடக்கிவைத்தார்.
- திருச்செந்தூர் பகுதியில் ஆலந்தலை தொடங்கி கல்லாமொழி வரையிலான 16 கி.மீ. தொலைவிலான கடலோர பகுதிகளில் இரவில் கூட்டம், கூட்டமாக திமிங்கலங்கள் கரை ஒதுங்கின.
- தாராசுரம் கோயிலின் கூம்பிய விமானத் தோற்றமும் அதற்கு கீழே இருபுறமும் யானைகளும், குதிரைகளும் பூட்டிய ரதம்போல் அமைந்த மண்டபமும் வான்வெளி ரகசியத்தைக் காட்டுவதாக கூறியவர் **அமெரிக்க வானியலாளர் கார்ல் எட்வர்ட் சேகன்.**
- **எம்.ஜி.ஆரின் 99 வது பிறந்தநாள் 17-01-2016 அன்று கொண்டாடப்பட்டது.**
- மக்களின் குறைகளைக் களைய **அம்மா அழைப்பு மையம்** என்ற புதிய திட்டம் 19-1 -2016 அன்று தொடங்கப்பட்டது. கட்டணமில்லாத **"1100'** என்ற தொலைபேசி எண்ணை 24 மணி நேரமும் தொடர்பு கொண்டு மக்கள் தங்களது குறைகளைத் தெரிவிக்கலாம்.
- **தமிழக அரசின் தற்போதைய நிகர கடன் ரூ. 1.98 லட்சம் கோடி** மட்டுமே தமிழக நிதித்துறை அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் கூறினார்.
- **இடைநிலை மாணவர் சேர்க்கையில் தமிழகம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.**அரசு மேற்கொண்ட முயற்சிகளால் இடைநிலைக் கல்வியில் நிகர மாணவர் சேர்க்கை 94.71 சதவீதமாக உயர்ந்து நாட்டிலேயே முதலிடம் என்ற நிலையை தமிழகம் எட்டியுள்ளது

- புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் பிறந்த நாளான ஏப்ரல் 29-ஆம் தேதியை ஆண்டுதோறும் **தமிழ்க் கவிஞர் தினமாகக்** கொண்டாட தமிழக அரசு முடிவெடுத்துள்ளது.

- **தமிழகத்தில் வாக்காளர்களின் எண்ணிக்கை 5.79 கோடியாக உயர்ந்துள்ளது.** அதில் ஆண் வாக்காளர்கள் 2.88 கோடி பேரும், பெண் வாக்காளர்கள் 2.91 கோடி பேரும் உள்ளனர். ஆண்களை விட பெண் வாக்காளர்களே அதிகமாக இருக்கின்றனர்.

- **இறுதி வாக்காளர் பட்டியல்களின்படி, தமிழ்நாட்டிலேயே அதிக அளவு வாக்காளர்கள் கொண்ட சட்டமன்றத் தொகுதி காஞ்சீபுரம் மாவட்டத்திலுள்ள 27.சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதியாகும்.** 18 - 19 வயதுடைய இளைய வாக்காளர்களும் (12,797 பேர்) இத்தொகுதியில்தான் அதிகமாக உள்ளனர் (ஆண்கள் 7214 , பெண்கள் 5583).
    - தமிழ்நாட்டிலேயே குறைந்த அளவு வாக்காளர்கள் கொண்ட சட்டமன்றத் தொகுதி நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள 164.**கீழ்வேளூர் (தனி)** சட்டமன்றத் தொகுதியாகும்.
    - பணித்தொகுதி வாக்காளர் அதிகமுள்ள சட்டமன்றத் தொகுதி மதுரை மாவட்டத்திலுள்ள 196. **திருமங்கலம்** சட்டமன்றத் தொகுதியாகும் (2402 பேர்).

- மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வணிகர்களுக்கான **'அம்மா சிறு வணிக கடன் உதவி'** திட்டத்தை முதல்வர் ஜெயலலிதா நேற்று தொடங்கி வைத்தார். இதன் படி, கூட்டுறவு வங்கிகள் மூலம் ரூ.5 ஆயிரம் வரை வட்டியில்லா கடன் வழங்கப்படும். இதற்கான 11 சதவீத வட்டியை கூட்டுறவு வங்கிகளுக்கு தமிழக அரசே வழங்கும். வாரந்தோறும் ரூ.200 என வணிகர்கள் இந்த கடனை 25 வாரங்களில் திருப்பி செலுத்த வேண்டும். குறித்த காலத்தில் கடனை திருப்பிச் செலுத்துபவர்களுக்கு மீண்டும் அதே அளவு தொகை 4 சதவீத வட்டியில் வழங்கப்படும் என்று முதல்வர் தெரிவித்திருந்தார்.

- யானை- மனித எதிர்கொள்ளலைத் தடுத்து உயிரிழப்புகளை தவிர்க்க அரசுப் பேருந்துகளில் புதிய கருவி பொருத்தப்பட்டு எச்சரிக்கும் திட்டம், **கோவை மாவட்டம் வால்பாறையில்** நேற்று தொடங்கப்பட்டது.
- சத்தியபாமா பல்கலைக்கழக இயக்குநர் முனைவர் **மரியஜீனா ஜான்சன் சிறந்த பெண்மணியாக** தேர்வு செய்யப்பட்டுள்ளார். அவருக்கு குடியரசு

www.tnpscportal.in

தலைவர் விருந்து வழங்கி கவுரவித்தார். இந்திய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்ற அமைச்சகமும், பேஸ்புக் சமூக வலைதளமும் இணைந்து நடத்திய போட்டியில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்த நூறு பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களுக்கு குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி, ராஷ்டிரபதி பவனில் நேற்று மதிய விருந்தளித்து கவுரவித்தார். இதில் சத்தியபாமா பல்கலைக் கழகத்தின் இயக்குநர் முனைவர் மரியஜீனா ஜான்சன் கல்வித் துறைக்கான சாதனையாளராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

- **இந்தியாவிலே அதிக அமர்வுகளுடன் கூடிய அலுவல்களை தமிழகம் உள்ளிட்ட மூன்று மாநிலங்களின் சட்டப்பேரவைகள் சிறப்பாக நடத்தியதாக மக்களவைத் தலைவர் சுமித்ரா மகாஜன் பாராட்டுத் தெரிவித்தார்**.2014-15ஆம் ஆண்டில் கர்நாடகத்தில் 78, பிகாரில் 75, தமிழ்நாட்டில் 50 அமர்வுகளை அந்த மாநிலங்களின் சட்டப்பேரவைகள் கண்டுள்ளது .

- தமிழகத்தில் கோவை மாவட்டத்தில் இயல்பை விட கூடுதலாக 212 சதவீதம் அளவுக்கு குளிர் கால மழை பெய்துள்ளது.

- **ராஜராஜ சோழனின் மெய்கீர்த்தியில் உள்ள காந்தளூர் சாலை மலபார் பகுதியில் இருக்கிறது** என்றார் தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறையின் ஒய்வு பெற்ற கல்வெட்டு ஆய்வாளர் எஸ். ராமச்சந்திரன்.

- **மன்னர் திருமலைநாயக்கரின் 433-வது பிறந்த நாள்** விழா முதல் அரசு விழாவாக 24-01-2015 அன்று, மதுரையில் கொண்டாடப்பட்டது.

- **வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளதா என்பதை, 1950 என்ற எண்ணுக்கு எஸ்எம்எஸ் அனுப்பி விவரம் பெறலாம்** : அனைத்து வாக்காளர்கள் தங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ளதா என்பதை எளிதாக அறிந்துக்கொள்ள வசதியாக, இந்திய தேர்தல் ஆணையம் மற்றும் தமிழக தேர்தல் ஆணையமும் இணைந்து புதிய வசதியை ஏற்படுத்தியுள்ளது.

www.tnpscportal.in

- **ஸ்மார்ட் சிட்டி (பொலிவுறு நகரங்கள்)** திட்டத்தில் இடம் பெறும் முதல் 20 நகரங்கள் பட்டியல் வெளியானது. இதில், தமிழகத்தின் **சென்னை, கோவை** நகரங்கள் இடம்பெற்றுள்ளன. மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர் வெங்கய்ய நாயுடு இப்பட்டியலை வெளி யிட்டார்.

- **இந்தியாவில் மனித உரிமைக்காக போராடி வரும் வழக்கறிஞரும் தமிழருமான ஹென்றி திபேன், அம்னெஸ்டி இன்டர்நேஷனல் (ஜெர்மனி) அமைப்பின் 8-வது மனித உரிமை விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.** ரூ.7.3 லட்சம் ரொக்க பரிசுத் தொகை அடங்கிய இந்த விருது, ஜெர்மனியின் பெர்லின் நகரில் உள்ள மேக்சிம் கோர்கி திரையரங்கில் வரும் ஏப்ரல் 25-ம் தேதி நடைபெறும் விழாவில் வழங்கப்படும். இந்த விருதைப் பெறும் முதல் இந்தியர் இவர் தான்.

- **சென்னை மாநகராட்சியின் புதுமை யான தெருக்கள் வடிவமைப்பு திட்டமானது சர்வதேச அளவிலான 'சஸ்டேனியா 2015' விருதை வென்றுள்ளது.** சென்னை மாநகராட்சியில் மோட் டார் வாகனம் அல்லாத போக்கு வரத்து கொள்கை உருவாக்கப் பட்டுள்ளது. அதில் சைக்கிள் ஓட்டுவது, மோட்டார் வாகனம் அல்லாத மனிதனால் இயக்கப்படும் போக்குவரத்து ஆகியவற்றுக்கு ஏதுவாக உள்கட்டமைப்பு பணிகளை மேற்கொள்வதற்கான வழிவகைகள் வகுக்கப்பட்டுள்ளன. டென்மார்க்கிலிருந்து வெளிவரும் 'சஸ்டேனியோ 100' என்ற வருடாந்திர வழிகாட்டியில் சிறந்த 100 புதுமையான, நிலையான தீர்வுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பிரசுரிக்கப்படுகிறது. இதில் சென்னை மாநகராட்சியின் மோட்டார் வாகனம் அல்லாத போக்குவரத்து கொள்கையின்படி தெருக்களை வடிவமைக்கும் திட்டம் குறித்து, நடப்பவர் மற்றும் வண்டி ஓட்டுபவர்களுக்கு ஏற்றவாறு தெருக்களை வடிவமைத்தல் என்ற தலைப்பில், நடைபாதை திட்டம் பரிந்துரைக்கப்பட்டது. உலக அளவில் பெறப்பட்ட 1100 திட்டங்களில், மாநகராட்சியின் தெருக்கள் வடிவமைப்பு திட்டம், ஹாலிவுட் நடிகரும், முன்னாள் கலிபோர்னியாவின் கவர்னருமான அர்னால்டு தலைமையிலான நீதிபதி குழுவால் தேர்வு செய்யப்பட்டது.

- **தமிழக அரசின் "பசுமை வீடுகள்' திட்டத்துக்கு மத்திய அரசு ஒப்புதல்** : பொருளாதார ரீதியில் நலிவடைந்த பிரிவைச் சேர்ந்தவர்கள் வசிக்கும் 10 ஆயிரம் வீடுகளுக்கு சூரிய ஒளி மூலம் மின்சாரத் தகடுகளை நிறுவும் தமிழக அரசின் திட்டத்துக்கு மத்திய அரசு ஒப்புதல் தெரிவித்துள்ளது. பசுமை வீடுகள் திட்டம்: இதன்படி, 157 பஞ்சாயத்து நகரங்களில் பொருளாதார ரீதியில் நலிவடைந்தவர்கள் வசிக்கும் 10 ஆயிரம் வீடுகளுக்கு தலா ரூ.2.53 லட்சம் என்ற வீதத்தில் நிதியுதவி செய்ய மத்திய அரசு ஒப்புதல் தெரிவித்துள்ளது. இந்தத் தொகையில் வீடுளுக்கு தலா ரூ.1.50 லட்சத்தை மத்திய வீட்டு வசதி, நகர்ப்புற வறுமை ஒழிப்புத் துறையும், ரூ.60 ஆயிரத்தை மாநில அரசு அதன் பங்காகவும், ரூ.43 ஆயிரத்தை பயனாளி தனது பங்களிப்பாகவும் வழங்க வேண்டும்.

- **பெண் விவசாயிக்கு முதல்வர் விருது** : குடியரசு தின விழாவை ஒட்டி, சென்னை கடற்கரைச் சாலையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விழாவில், அதிக தானிய மகசூல் செய்த பெண் விவசாயி ப.பிரசன்னாவுக்கு சிறப்பு விருதினை முதல்வர் ஜெயலலிதா வழங்கினார். மதுரை மாவட்டம் திருப்பாலையைச் சேர்ந்த பிரசன்னா, திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்ப முறையை கடந்த பல ஆண்டுகளாக பின்பற்றி வருகிறார். டிஆர்ஒய் 3 ரக விதையை தஞ்சாவூரில் வேளாண்மைத் துறையிடம் இருந்து பெற்று, புதிய தொழில்நுட்ப ஆலோசனைகளைக் கடைப்பிடித்தார். 68 சென்ட் நிலத்துக்கு 2 கிலோ நெல் விதைகளைப் பயன்படுத்தி சாகுபடி செய்துள்ளார். நடவு வயலில் ஆட்டுக்கிடை வைத்தும், தக்கை பூண்டு விதைகளை விதைத்து மடக்கி உழுதும், தொழு உரத்தை பயன்படுத்தி உள்ளார். இதனால் அரை ஏக்கருக்கு 3,223 கிலோ தானிய மகசூலும், ஹெக்டேருக்கு 16,115 கிலோ தானிய மகசூலும் செய்துள்ளார். இது மாநிலத்திலேயே அதிக விளைச்சலாகும்.

- **மழை வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்டவர்களுக்கு அண்ணாப் பதக்கம்: முதல்வர் வழங்கினார்** : அவர்கள் பெயர் விவரம்: எம்.எஸ்.பாஸ்கர், கே.கே.நகர் காவல் நிலைய ஆய்வாளர், முகமது

யூனுஸ், சூளைமேடு சவுராஷ்டிரா நகர், சென்னை, சீனிவாசன், நங்கநல்லூர், செல்வன் ரிஷி, சீர்காழி திருமுல்லைவாசல்.

- **கோட்டை அமீர் விருது** : மதநல்லிணக்கத்துக்காக பாடுபட்ட தஞ்சாவூர் மாவட்டம் எம்.பி. அபுபக்கருக்கு கோட்டை அமீர் மதநல்லிணக்க பதக்கம் வழங்கப்பட்டது. இவருக்கு பதக்கமும் ரூ.25 ஆயிரத்துக்கான காசோலை, சான்றிதழ் வழங்கப்பட்டது.

- விரிவாக்கம் செய்யப்பட்ட சென்னை மாநகராட்சியை **'பெருநகர சென்னை மாநகராட்சி'** என முறைப் படி அறிவித்து காணொலிக் காட்சி மூலம் முதல்வர் ஜெயலலிதா தொடங்கி வைத்தார்.10 மண்டலங்கள், 155 வார்டுகளுடன் 174 சதுர கி.மீ. பரப்பளவில் சென்னை மாநக ராட்சி இருந்தது. காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள 42 உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து 426 சதுர கி.மீ. பரப்பளவுக்கு இது விரிவாக்கம் செய்யப்பட்டது. **விரிவாக்கம் செய்யப்பட்ட சென்னை மாநகராட்சிக்கு 'பெருநகர சென்னை மாநகராட்சி' என பெயர் மாற்றம் செய்து கடந்த 26-10-2015ல் அரசாணை வெளியிடப்பட்டது.** அதன்படி, சென்னை மாநகராட்சியை **'பெருநகர சென்னை மாநகராட்சி'** என அறிவித்து தலைமைச் செயல கத்தில் முதல்வர் ஜெயலலிதா நேற்று முன்தினம் காணொலி காட்சி மூலம் முறைப்படி தொடங்கி வைத்தார்.

- **தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் 11 புதிய உறுப்பினர்களை தமிழக அரசு நியமித்திருக்கிறது.** தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கான நடை முறைகள் குறித்து **இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 316 ஆவது பிரிவில்** தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு உறுப்பினர்களாக நியமிக் கப்படுபவர்களில் பாதி பேர், அவர்கள் பணி நியமனம் செய்யப்படும் நாளில் மத்திய அல்லது மாநில அரசு பணிகளில் குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் பணியாற்றியிருக்க வேண்டும் என கூறப்பட்டிருக்கிறது.

# இந்தியா

- **பாகிஸ்தான் பாடகர் அட்னான் சமிக்கு இந்திய குடியுரிமை அளிக்கப்பட்டுள்ளது.** ஜனவரி 1, 2016 முதல் அவர் இந்தியக் குடிமகனாகிறார். பாகிஸ்தானின் பிரபல பாடகர் அட்னான் சமி(46). லாகூரில் பிறந்த இவர் 2001 மார்ச் 31-ல் இந்தியாவுக்கு முதல்முறையபாகிஸ் தானில் உள்ள இந்திய தூதரகம் மூலம் பெற்ற ஓராண்டு விசாவில் அவர் இந்தியா வந்திருந்தார்.

- **இந்திய அறிவியல் மாநாடு 2016** : இந்தியா மற்றும் வெளிநாடுகளை சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்கும் **இந்திய அறிவியல் மாநாடு** கர்நாடக மாநிலம் மைசூருவில் ஜனவரி 3-ம் தேதி தொடங்கியது.

- **ரூ.50,000-த்துக்கும் மேல் பணப்பரிவர்த்தனை செய்யும்போது பான் எண்ணை கட்டாயம்** தெரிவிக்க வேண்டும் என்ற மத்திய அரசின் புதிய உத்தரவு வெள்ளிக்கிழமை (ஜன.1) முதல் அமலுக்கு வருகிறது.

- 23 உறுப்பினர்கள் கொண்ட திரைப்பட தணிக்கை அமைப் பான சென்சார் போர்டு தலைவராக பெகலாஜ் நிகலானி உள்ளார்.

- **இந்தியாவும் பாகிஸ்தானும் தத்தமது நாடுகளில் செயல்படும் அணுசக்தி நிலையங்கள் பட்டியலை பரிமாறிக்கொண்டன.** அணு சக்தி நிலையங்களை தாக்குவ தில்லை என இருநாடுகளும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் கீழ், தொடர்ந்து 25வது ஆண்டாக இந்தப் பட்டியல் பரிமாறிக்கொள் எப்பட்டது. இதற்கான நிகழ்ச்சி இஸ்லாமா பாத், டெல்லியில் உள்ள தூதர கங்களில் நேற்று ஒரே நேரத்தில் நடந்ததாக வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு தெரி விக்கிறது. இத்தகைய பட்டியல் முதல்முதலாக 1992-ம் ஆண்டு ஜனவரி 1-ம் தேதி பரிமாறிக் கொள்ளப்பட்டது. அணுசக்தி நிலையங்களை தாக்கமாட்டோம் என்ற ஒப்பந்தம் 1988-ம் ஆண்டு டிசம்பர் 31-ம் தேதி கையெழுத்தாகி 1991-ம் ஆண்டு ஜனவரி 27-ம் தேதி அமலுக்கு வந்தது. ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 1-ம் தேதி அணுசக்தி நிலை யங்கள் பட்டியலை பரிமாறிக் கொள்ளவும் இந்த ஒப்பந்தம் வகைசெய்கிறது.

- **சீன மொழியில் அச்சிட்டு வெளியிடப்பட்ட தாகூரின் கவிதை நூலை சீனப் பதிப்பகம் திரும்பப் பெற்றுள்ளது. தாகூரின் 'ஸ்ட்ரே பர்ட்ஸ்' (Stray Birds) கவிதை நூலை** சீனாவைச் சேர்ந்த கவிஞர் பெங் டாங் அந்த நாட்டு மொழியில் மொழிபெயர்ந்துள்ளார். அந்த கவிதை நூலை ஜிஜியாங் லிட்ரேச்சர் அண்ட்

ஆர்ஸ்ட் பப்ளிசிங் ஹவுஸ் என்ற பதிப்பகம் வெளியிட்டுள்ளது. ஆனால் சீன மொழிபெயர்ப்பு ஆபாசம் நிறைந்ததாகவும் மூல கவிதை நூலில் இருந்து முழுமையாக மாறியிருப்பதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதுதொடர்பாக இந்தியா உட்பட உலகம் முழுவதும் இருந்து கடும் கண்டனங்கள் எழுந்துள்ளதால் தாகூரின் மொழி பெயர்ப்பு கவிதை நூலை அதனை வெளியிட்ட சீனப் பதிப்பகம் திரும்பப் பெற்றுள்ளது.

- இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் **ஏ.பி.பரதன்** (92) டெல்லியில் 02-01-2016 அன்று காலமானார்.

- **'போக்ஸோ' சட்டம்** : 18 வயதுக்கு உட்பட்ட குழந் தைகள், சிறுவர், சிறுமியருக்கு எதிராக நிகழ்த்தப்படும் பாலியல் துன்புறுத்தல்களை தடுப்பதற்காக மத்திய அரசு கடந்த 2012-ம் ஆண்டு 'பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் போக்ஸோ (Protection of Children from Sexual Offences Act - 2012) என்ற சட்டத்தைக் கொண்டுவந்தது.

- **"ஜன் ஆஹார்' திட்டம்** : நாடு முழுவதும் உள்ள ரயில் நிலையங்களில் **"ஜன் ஆஹார்'** என்ற பெயரில் உணவகங்களை இந்திய ரயில்வே உணவு வழங்கல் மற்றும் சுற்றுலாக் கழகம் (ஐஆர்சிடிசி) தொடங்கி உள்ளது. இந்த உணவகத்தில் அனைத்து உணவு வகைகளும் ரூ.20-க்கும் குறைவான விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

- **பஞ்சாப் மாநிலம், பதான்கோட் விமானப்படை தளத்தில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் ஜனவரி 2 ஆம் தேதி தாக்குதல் நடத்தினர்.** இந்த குண்டு வெடிப்பில் தேசிய பாதுகாப்பு படையை சேர்ந்த **கேரள மாநிலத்தவரான கமாண்டோ வீரர் லெப்டினன்ட் கர்னல் நிரஞ்சன்** வீர மரணம் அடைந்தார். மேலும், 1995 காமன்வெல்த் துப்பாக்கி சுடும் போட்டியில் தங்கம் வென்ற பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த **கேப்டன் பதேக் சிங்கும்** வீரமரணமடைந்தார்.
- கர்நாடக மாநிலம் மைசூரு பல்கலைக்கழகத்தில் உள்ள 'மானசா கங்கோத்ரி' வளாகத்தில், **103-வது இந்திய அறிவியல் மாநாடு** துவங்கியது.

- இந்திய-ஜப்பான் நாடுகளின் கடற்படைகளுக்கிடையேயான கூட்டு பயிற்சியான **சக்யோக்-கைஜின் (Sahyog-Kaijin)** ஜனவரி 12 முதல் ஐந்து நாட்களுக்கு வங்காள விரிகுடாவின் சென்னை கடற்கரையில் நடைபெறவுள்ளது.

www.tnpscportal.in

- நாடு முழுவதும் இருந்து சுமார் 50 ஆயிரம் மாணவர்கள் கலந்து கொள்ளும் **'சாரங்' கலை கலாச்சார விழா** சென்னை ஐஐடி-யில் நடைபெற்றது.
- கங்கை நதி மாசுபடுவதைத் தடுப்பதற்காக, உத்தரப் பிரதேச மாநிலத்தில் **கங்கை கிராமத் திட்டத்தை** மத்திய நீர்வளத் துறை அமைச்சர் உமா பாரதி செவ்வாய்க்கிழமை தொடக்கி வைத்தார்.
- **உச்ச நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி சரோஸ் ஹோமி (எஸ்.ஹெச்.) கபாடியா மும்பையில் காலமானார்.** உச்ச நீதிமன்றத்தின் 38-ஆவது தலைமை நீதிபதியாக 2010ஆம் ஆண்டில் பொறுப்பேற்று, 2012ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29 வரை அப்பதவியை வகித்தார்.
- **பெருநிறுவனங்கள் தங்கள் ஆண்டு வருமானத்தில் 2% சமூக நலனுக்காகச் செலவிட வேண்டும் என்பதை உலக நாடுகளில் இந்தியா மட்டுமே சட்டமாக்கியுள்ளது.**
- **மும்பையில் தாராவி குடிசை பகுதியில், உலகிலேயே முதல் முறையாக நடமாடும் குடிசை அருங்காட்சியகம்** அடுத்த மாதம் திறக்கப்பட உள்ளது. ஆசியாவிலேயே மிகப் பெரிய குடிசைப் பகுதி மும்பை தாராவி. 'ஸ்லம்டாக் மில்லியனேர்' திரைப்படம் மூலம் தாராவி பகுதி சுற்றுலா பயணிகளின் கவனத் தையும் ஈர்த்துள்ளது.
- **ஜம்மு காஷ்மீர் முதல்வர் முஃப்தி முகம்மது சயீத் காலமானார்.**
- இந்தியாவுடன் இணைந்து பணியாற்றுவது தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடியை **சர்வதேச தடுப்பூசி மருந்து கூட்டமைப்பின் (கவி) தலைமைச் செயல் அதிகாரி சேத் பெர்க்லி**, தில்லியில் சந்தித்து ஆலோசனை நடத்தினார்.
- மகாமகம் விழாவையொட்டி **அகில பாரத துறவியர் மாநாடு**, கும்பகோணத்தில் வரும் பிப்ரவரி 18 ஆம் தேதி துடங்குகிறது.
- **வெளிநாடுவாழ் இந்தியர்கள் விவகார இலாகாவை வெளியுறவுத்துறையுடன் இணைக்க பிரதமர் மோடி ஒப்புதல் அளித்து உள்ளார்.** மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான கடந்த ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின் போது 2004-ம் ஆண்டு மே மாதம் வெளிநாடுவாழ் இந்தியர்கள் விவகார இலாகா என்ற பெயரில் புதிதாக ஓர் இலாகா உருவாக்கப்பட்டது.
- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட **'ஐ.என்.எஸ்., கட்மட்'** என்ற அதிநவீன நீர்மூழ்கி எதிர்ப்பு போர்க் கப்பல் இந்திய கடற்படையில் 7-1-2016 அன்று இணைக்கப்பட்டது.கோல்கட்டாவைச் சேர்ந்த, 'கார்டன் ரீச் ஷிப் பில்டர்ஸ்' நிறுவனம், இந்திய கடற்படையுடன் இணைந்து, 90 சதவீத உள்நாட்டு பொருட்கள் மூலம், இந்த நீர்மூழ்கி எதிர்ப்பு போர்க் கப்பலை உருவாக்கி உள்ளது.

www.tnpscportal.in

- **'ஒன் டிக்கெட்; ஒன் ஐ.டி.,' திட்டம் அறிமுகம்** : 'ரயில் பயணத்துக்காக, டிக்கெட் முன்பதிவு செய்தால் மட்டும் போதாது; அதில் உள்ள பெயரும், டிக்கெட் பரிசோதகரிடம் காட்டும் அடையாள அட்டையில் உள்ள பெயரும் ஒன்றாக இருக்க வேண்டும். இல்லையெனில், டிக்கெட் ரத்தாகி விடும்' என, ரயில்வே வாரியம் எச்சரித்துள்ளது.
- இன்கிரிடிபிள் இந்தியா' என்றழைக்கப்படும், 'ஈடு இணையில்லா இந்தியா' **பிரசாரத்தின் துாதர் பொறுப்பிலிருந்து, நடிகர் அமீர்கான் நீக்கப்பட்டுள்ளார்**.
- 2003-**ம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி** 9-**ம் நாள் வெளிநாடு வாழ் இந்தியர் தினமாகக் கொண்டாடப்பட்டது.** மகாத்மா காந்தி, தென்னாப்பிரிக்காவில் இருந்து மும்பை வந்த சேர்ந்த நாள் ஜனவரி 9, 1915. அதன் நினைவாக அந்த நாள் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு இந்திய நகரத்தில் இவ்விழா கொண்டாடப்பட்டு வருகிறது. வெளிநாடு வாழ் இந்தியர்களின் சேவையைப் பாராட்டும் வகையில் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் சார்பில் **'ப்ரவசி பாரதிய சம்மான்' என்ற பெயரில் விருது வழங்கப்படுகிறது.**
- விலங்குகள் நல அமைப்பு பீட்டா' ன் இந்திய பிரிவு தலைமை நிர்வாக அதிகாரி - **பூர்வா ஜோஷிபூரா**
- ஜம்மு-காஷ்மீர் மாநில புதிய முதல்வராக மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர் மெகபூபா முப்தி பதவியேற்பதில் காலதாமதம் ஏற்பட்டு வருவதால் **காஷ்மீரில் 7-வது முறையாக ஆளுநர் ஆட்சி** அமல்படுத்தப்பட்டது.
- **கொடையாளிகள் வரிசையில் மூன்றாவது முறையாக முதலிடத்தில் அசிம் பிரேம்ஜி** :இந்தியாவின் மிக தாராள மனமுடைய கொடையாளியாக விப்ரோ நிறுவனத்தின் தலைவர் அசிம் பிரேம்ஜி மூன்றாவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட் டுள்ளார். ஹுரன் இந்தியா நிறுவனம் 2015-ம் ஆண்டின் சிறந்த கொடையாளிகள் பட்டியலை வெளியிட்டுள்ளது. இந்தப் பட்டியலில் 36 கொடையாளிகள் இடம்பிடித்துள்ளனர். கொடையாளிகள் பட்டியலில் முதலிடத்தில் உள்ள அசிம் பிரேம்ஜி 27,514 கோடி ரூபாய் கல்வி துறைக்கு கொடையளித்துள்ளார்.
- ஆன்மிக தலங்களை இணைக்கும் வகையில் **சென்னை - கன்னியாகுமரி இடையே சுற்றுலா கப்பல் போக்குவரத்து** விரைவில் செயல்படுத்தப்படும் என்று மத்திய சுற்றுலா மற்றும் கலாசாரத்துறை, விமான போக்குவரத்து துறை இணை மந்திரி மகேஷ் சர்மா தெரிவித்தார்.
- **சென்னை அருகே வங்க கடலில், இந்தியா, ஜப்பான் கடலோர காவல் படை கப்பல்கள் ஜன., 15ல் கூட்டு பயிற்சியில் ஈடுபட்டன**. இரு ஆண்டுகளுக்கு ஒரு

முறை, இரு நாடுகளின் கடலோர காவல் படைகளும் கூட்டு பாதுகாப்பு ஒத்திகையில் ஈடுபடுகின்றன. இந்த ஆண்டு சென்னை அருகே வங்கக்கடலில் இந்த ஒத்திகை நடைபெற்றது. இந்திய கடலோர படையின், 'சமுத்திர பெஹ்ரேதார்' கப்பலும், ஜப்பான் நாட்டின், 'இச்சிகோ' கப்பலும் பங்கேற்றன.

- **அமெரிக்காவின் ஹார்வார்ட் பல்கலைகழகத்தில் பிப்ரவரி மாதம் நடைபெற உள்ள சர்வதேச கருத்தரங்கில், இந்தியாவின் சவால்களும் மற்றும் வாய்ப்புகளும் என்ற தலைப்பில் நடிகர் கமல்ஹாசன் சிறப்புரையாற்ற உள்ளார்.** இந்த கருத்தரங்கில், இந்தியாவின் சார்பில் நடிகர் கமல்ஹாசன், முன்னாள் மத்திய அமைச்சர் சசி தரூர், வங்கி உயரதிகாரி சாந்தா கோச்சார் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.
- 'அரசுத் துறைகள் குறித்து, ஆன்லைனில் புகார்களை பதிவு செய்வோர், இனி, ஆதார் எண்ணைக் குறிப்பிட வேண்டும்' என, மத்திய அரசு அறிவித்துள்ளது.

- இந்திய வம்சாவளியை சார்ந்த அமெரிக்க தொழிலதிபர் **பாபி ஜிண்டால்** கவனராக இருந்த அமெரிக்க மகாணம் - லூசியானா
- **சென்னையில் இந்திய - ஜப்பான் கடற்படை கூட்டுப்பயிற்சி** : இந்தியா மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு இடையே நல்லுறவை பேணிக்காக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்திலும் ஜப்பான் நாட்டில் இருந்து போர்க்கப்பல் சென்னைக்கு வந்து, கூட்டு பயிற்சியில் ஈடுபடுவது வழக்கம். **ஜப்பான் நாட்டின் ‘இச்சிகோ பி.எல்.எச்-08’ எனும் கடற்படை போர்க்கப்பல் சென்னைக்கு வந்தடைந்தது**. ஜப்பான் போர்க்கப்பலுடன் இணைந்து, இந்திய கடலோர காவல்படைக்கு சொந்தமான ‘சமுத்ரா’, ‘ராஜ்கமல்’, ‘ராஜ்தரங்க்’, ‘ஹோவர்ஹர்ட்’, ‘சி-417’, ‘சி-415’, ஒரு ‘டோர்னியர்’ விமானம் மற்றும் ஒரு ‘சீட்டா’ ஹெலிகாப்டரும் கூட்டு பயிற்சியில் ஈடுபட்டன.

- அயல் பணிகளை (அவுட்சோர்சிங்) பெறுவதில் சர்வதேச அளவில் **இந்தியா முதலிடத்தில் உள்ளது.** பாதுகாப்பான வணிகச் சூழல், நிதிச் சிக்கனம் ஆகியவற்றின் அடிப்படையில் அயல்பணி ஒப்படைப்புத் துறையில் இந்தியா முன்னிலை வகிக்கிறது. லண்டனைச் சேர்ந்த சர்வதேச மேலாண்மை ஆலோசனை நிறுவனம் இத்தகவலைத் தெரிவித்துள்ளது. இதில் இந்தியாவுக்கு அடுத்தபடியாக சீனா, மலேசியா, பிரேசில், இந்தோனேசியா, தாய்லாந்து, பிலிப்பின்ஸ், மெக்ஸிகோ, சிலி, போலந்து ஆகிய நாடுகள் முறையே முதல் 10 நாடுகள் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த **நிக்கி ஹேலி** கவர்னராக பதவிவகிக்கும் அமெரிக்க மகாணம் - தெற்கு கரோலினா
- இந்தியாவில், 20 வயதிற்கு உட்பட்ட மதத்தினரில், இஸ்லாமியர்கள், 47 சதவீதத்துடன் முதலிடத்தில் உள்ளனர். அடுத்த இடங்களில், இந்துக்கள், 40; கிறிஸ்தவர்கள், 37; புத்த மதத்தினர், 37; சீக்கியர்கள், 35; ஜெயின், 29 சதவீதம் என்ற அளவில் உள்ளனர்.

- 1971ல், பாகிஸ்தானுக்கு எதிரான போரில், இந்தியா வெற்றியடைய காரணமாக இருந்தவராக கருதப்படும், லெப்டினன்ட் ஜெனரல், **ஜே.எப்.ஆர்.ஜேக்கப்** காலமானார்.
- முன்னணி விஞ்ஞானிகள் மற்றும் இன்ஜினியர்களை அமெரிக்காவிற்கு அதிக அளவில் தரும் ஆசிய நாடுகளில் **இந்தியா முதலிடத்தில் உள்ளது.**

- இந்தியாவில் ஆதார் அட்டை பயன்பாடு அதிகரித்து வருவதால் ஊழல் குறைந்துள்ளது என உலக வங்கி தெரிவித்துள்ளது.
- தைவான் நாட்டில் கடந்த 1945ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நேரிட்ட விமான விபத்தின்போது ஏற்பட்ட காயங்களால் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் உயிரிழந்து விட்டார் என்று பிரிட்டனில் இயங்கும் www.bosefiles.info எனும் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- செல்ஃபி புகைப்படம் எடுக்கும் மோகத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கையில் இந்தியா முதலிடம் பெற்றுள்ளதாக வாஷிங்டன் போஸ்ட் செய்தி நிறுவனத்தின் ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.
  - **"எழுச்சி இந்தியா'** திட்டத்தின் கீழ் தொழில் தொடங்கும் புதிய தொழில்முனைவோருக்கு முதல் 3 ஆண்டுகளுக்கு வரி விலக்கு அளிக்கப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார்.
  - இந்தியாவில் இயற்கை விவசாயத்தை முழுமையாக மேற்கொள்ளும் முதல் மாநிலமாக **சிக்கிம்** உருவெடுத்துள்ளது. சிக்கிம் மாநிலத்தின் தலைநகர் கேங்டாக்கில் ஜனவரி 18-ஆம் தேதி நடைபெற்ற வேளாண்மை மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றார்.
  - **சிறார் நீதிச்சட்ட திருத்த மசோதா - 2015 நிறைவேற்றப்பட்டது.** சிறார்களுக்கு, பீடி, சிகரெட், மது, பான்பராக், புகையிலை உள்ளிட்ட போதைப் பொருட்களை விற்பனை செய்வோருக்கு, ஏழு ஆண்டுகள் சிறையும், ஒரு லட்சம் ரூபாய் வரை அபராதமும் விதிக்கும், **புதிய சட்டம் 15-01-2016 முதல் அமலுக்கு வந்துள்ளது.**

இதற்கான அரசாணையை, குழந்தைகள் மற்றும் பெண்கள் மேம்பாட்டு அமைச்சகம் பிறப்பித்துள்ளது.

**சட்டத்தின் முக்கிய அம்சங்கள்:**

- சிறார்களை பிச்சை எடுக்க பயன்படுத்துவது, அவர்களுக்கு, பீடி, சிகரெட், மது, 'குட்கா, பான் மசாலா ' உள்ளிட்ட புகையிலை பொருட்கள் மற்றும் போதை வஸ்துகளை விற்பது, தண்டனைக்குரிய குற்றம்
- இவ்வகை குற்றங்களுக்கு, ஏழு ஆண்டுகள் வரை சிறை தண்டனையும், ஒரு லட்சம் ரூபாய் வரை அபராதமும் விதிக்கப்படும். இவ்வாறு அதில் அம்சங்கள் உள்ளன.
- பாலியல் பலாத்காரம் போன்ற, கொடிய குற்றங்களில் ஈடுபடும், 16 - 18 வயதுள்ளோரை, சிறாராக கருதாமல், பெரியவர்களாக கருதி, கடும் தண்டனை வழங்க,இந்த சட்டம் வகை செய்கிறது. எனினும், சிறார் நீதி வாரியம், முதற்கட்ட விசாரணை நடத்தி அளிக்கும் பரிந்துரையை அடுத்தே, சிறுவர் நீதிமன்றம், தண்டனை குறித்து தீர்மானிக்கும். அத்தகைய சிறுவர்கள், 21 வயதாகும் வரை, பாதுகாப்பான இடத்தில் தங்க வைக்கப்படுவர். அவர்கள், 21 வயதை எட்டிய பிறகும், திருந்தவில்லை என தெரிய வந்தால், பெரியவர்களுக்கான சிறைக்கு அனுப்பப்படுவர். ராஜஸ்தான், ஒடிசா, சத்தீஸ்கர், ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களில், தண்டனை பெற்ற சிறார்களுக்கான, பாதுகாப்பு மையங்கள் இல்லாததால், பொது சிறைக்கு அனுப்பி வைக்கும் கொடுமை உள்ளது.
- ஐ.நா., குழந்தைகள் உரிமை மாநாட்டு தீர்மானத்தின் படி, 18 வயதிற்கு உட்பட்ட அனைவரையும், சிறாராக, சமமாக கருத வேண்டும் .
- சிறார் நீதி சட்டம், 2000த்திற்கு மாற்றாக, புதிய சட்டம் அறிமுகமாகி உள்ளது

❖ கடற்படை மற்றும் கடலோர காவல் படை தளங்களில் உள்ள அதிகாரிகளுக்கு பயிற்சி அளிப் பதற்காக தூத்துக்குடி துறை முகத்துக்கு இந்திய கடற்படைக்குச் சொந்த மான **ஐஎன்எஸ் திர், ஐஎன்எஸ் சுஜாதா, இந்திய கடலோர காவல் படைக்கு சொந்தமான ஐசிஜிஎஸ் வர்ணா** ஆகிய 3 போர்க் கப்பல்கள் வந்தன.

❖ **சிக்கிம் மாநிலத்தை நாட்டின் முதல் இயற்கை விவசாய மாநிலமாக அறிவித்தார் பிரதமர் மோடி**. கடந்த 12 ஆண்டுகளுக்கு முன்பு அம்மாநில முதல்வர் பவன் குமார் சாம்லிங் தலைமையிலான அரசு, சிக்கிம் மாநிலத்தை முற்றிலுமாக இயற்கை விவசாயத்துக்கு மாற்ற முடிவு செய்தது என்பது குறிப்பிடத்தக்கது.

- நாட்டிலேயே இதுவரை இல்லாத அளவுக்கு மிக, **மிகப் பெரிய அளவிலான தேசியக் கொடி** ஜார்க்கண்ட் மாநிலம், ராஞ்சியில் உருவாக்கப்பட்டுள்ளது. இது 66 அடி உயரமும், 99 அடி நீளமும் கொண்டதாகும்.நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் பிறந்த தினத்தை முன்னிட்டு, ஜனவரி 23-ஆம் தேதியன்று, பாதுகாப்புத் துறை அமைச்சர் மனோகர் பாரிக்கர் இந்தப் பெரிய தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.
- தில்லி கிரிக்கெட் சங்கத்தின் (டிடிசிஏ) செயல்பாடுகளை கண்காணிக்க அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் - **நீதிபதி முகுல் முத்கல்**
- இந்தியப் பெருங்கடலில் உள்ள தீவு நாடுகளில் ஒன்றான செஷல்ஸ்ஸுக்கு அதிநவீன படகை இந்தியா அன்பளிப்பாக வழங்க உள்ளது.

- கேரள மாநிலம் திருச்சூரில் வீட்டின் கதவை திறக்க தாமதமானதால், காவலரை காரை ஏற்றிக் கொலை செய்த வழக்கில் **பீடி தொழிலதிபரான முகமது நிஷாமுக்கு** ஆயுள் தண்டனை விதித்து கேரள நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- **புகழ்பெற்ற கர்நாடக நடனக் கலைஞர் மிருநாளினி சாராபாய் காலமானார்.** அவருக்கு வயது 97.இந்தியவிண்வெளி திட்டத்தின் தந்தை என்று அழைக்கப்பட்ட டாக்டர் விக்ரம் சாராபாயின் மனைவியான மிருநாளினி, பத்ம பூஷண் பட்டம் பெற்றவர்.அம்மா என்று பலராலும் அன்போடு அழைக்கப்பட்ட மிருநாளினி, தர்பானா அகாடமி என்ற அமைப்பை 1948ல் துவக்கினார். இந்த கலைக் கழகத்தில் சுமார் 18 ஆயிரம் மாணவ, மாணவிகள் பரதநாட்டியம் மற்றும் கதகளி நடனங்களில் தேர்ச்சி பெற்றனர்.
- **சென்னை மற்றும் தில்லியில் தேசிய முதியோர் நல மையங்களை அமைப்பதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.**
- நாடு முழுவதிலும் உள்ள பல்கலைக்கழகங்களில், யோகா சார்ந்த கலை மற்றும் அறிவியல் சார்ந்த படிப்புகளையும், நிகழ்ச்சிகளையும் நிறுவுவது தொடர்பாக, பெங்களூரில் உள்ள **சுவாமி விவேகானந்தா யோகா பல்கலைக்கழகத்தின் வேந்தர் ஹெச்.ஆர்.நாகேந்திரா** தலைமையில் 12 பேர் அடங்கிய குழுவை மத்திய அரசு நியமித்துள்ளது.
- **பொறியியல் கல்லூரிக்கான நிலப்பரப்பு அளவு குறைப்பு:** ஏஐசிடிஇ புதிய அனுமதி நடைமுறை வெளியீடு. புதிய பொறியியல் கல்லூரி (இளநிலை பொறியியல் படிப்புகள்) தொடங்க கடந்த 2015-16 கல்வியாண்டில் கிராமப்புறங்களில் 10 ஏக்கர் நிலங்களும், நகர்ப்புறங்களில் 2.5 ஏக்கர் நிலங்களும் இருக்க வேண்டியது கட்டாயமாக்கப்பட்டிருந்தது. இப்போது இந்த அளவு குறைக்கப்பட்டுள்ளது. அதாவது சென்னை, மும்பை, தில்லி,

www.tnpscportal.in

கொல்கத்தா, பெங்களூரு, ஹைதராபாத், ஆமதாபாத், புணே, சூரத் ஆகிய பெருநகரங்களில் புதிய பொறியியல் கல்லூரி தொடங்க **1.5 ஏக்கர் நிலங்கள் போதுமானது** என ஏஐசிடிஇ அறிவித்திருக்கிறது. இதுபோல, கிராமப்புறங்களில் புதிய பொறியியல் கல்லூரி தொடங்க 7.5 ஏக்கர் நிலங்கள் போதும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.மேலும், நகர்ப்புறங்களில் புதிய பொறியியல் கல்லூரிகள் தொடங்க முன்பிருந்ததுபோல் 2.5 ஏக்கர் நிலங்கள் வேண்டும் என்ற போதிலும், இரண்டு இடங்களில் இந்த நிலங்கள் இருக்கலாம் என சலுகை அளித்துள்ளது. அதாவது வகுப்புகள், நிர்வாகக் கட்டடங்கள் போன்றவற்றுக்கான 1.5 ஏக்கர் நிலங்கள் ஓர் இடத்திலும், மீதி நிலங்கள் 2 கிலோ மீட்டர் தொலைவுக்குள் வேறோர் இடத்திலும் இருக்கலாம் என்றும் சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

- **மகாத்மா காந்தி கொலை வழக்கை விசாரிக்க அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் - : நீதிபதி ஜீவன்லால் கபூர்**. மகாத்மா காந்தியை கொன்றவர்களான நாதுராம் கோட்ஸே, நாரயண் ஆப்தே ஆகியோரை, வீர சாவர்க்கரின் ஆதரவாளர்கள் என்று நீதிபதி ஜீவன்லால் கபூர் தலைமையிலான விசாரணைக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.
- **"நிகழாண்டில் பொருளாதாரத்தில் மிகவும் வேகமாக வளரும் நாடாக இந்தியா இருக்கும்" என்று ஐ.நா.வின் பொருளாதார அறிக்கை தெரிவித்துள்ளது.** ஐ.நா.வின் தெற்கு ஆசிய நாடுகளுக்கான பொருளாதார அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி, 2016-ஆம் ஆண்டில் 7.3 சதவீதமாகவும், 2017-ஆம் ஆண்டில் 7.5 சதவீதமாகவும் இருக்கும். நிகழாண்டில் உலக அளவில் பொருளாதாரத்தில் மிகவும் வேகமாக வளரும் நாடாக இந்தியா இருக்கும்.

- **உலகின் மிகச் சிறந்த நாடுகளின் பட்டியலில் இந்தியாவுக்கு 22-ஆவது இடம் கிடைத்துள்ளது.** அதிக அளவில் மனித ஆற்றலைக் கொண்டுள்ள போதிலும், மக்கள்தொகைப் பெருக்கத்தால் ஏழை நாடுகளின் பட்டியலில் இந்தியா இடம்பெற்றிருப்பதாவும் அதில் குறிப்பிடப் பட்டுள்ளது.பொருளாதார வளர்ச்சி, கலாசாரம், தொழில்முனைதல், உள்கட்டமைப்பு உள்ளிட்ட தன்மைகளின் அடிப்படையில் உலக நாடுகளை தரவரிசைப்படுத்தி இந்தப் பட்டியல் வெளி யிடப்பட்டுள்ளது. அமெரிக்காவின் செய்தி நிறுவனமான "யு.எஸ். நியூஸ் அண்ட் வேர்ல்ட் ரிப்போர்ட்' மற்றும் பி.ஏ.வி. பொருளாதாரக் கல்வி நிறுவனம் ஆகியவை

இணைந்து இந்தப் பட்டியலை வியாழக்கிழமை வெளியிட்டன.இந்தப் பட்டியலில் முதலிடத்தை ஜெர்மனி பிடித்துள்ளது. இரண்டாம் இடத்தில் கனடாவும், மூன்றாம் இடத்தில் பிரிட்டனும் உள்ளன. நான்காம் இடத்தில் அமெரிக்கா, ஐந்தாம் இடத்தில் ஸ்வீடன் ஆகிய நாடுகள் இடம் பெற்றுள்ளன.இந்தப் பட்டியலில் சீனாவுக்கு 17-ஆம் இடமும், இந்தியாவுக்கு 22-ஆம் இடமும் கிடைத்துள்ளன. இந்தியாவின் பொருளாதாரமானது வேகமான வளர்ச்சி அடையக்கூடியதாகவும், பன்முகத்தன்மையைக் கொண்டதாகவும் இருப்பதாக அந்நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- **உலகப்புகழ் பெற்ற மேடம் டுசாட் மெழுகு சிலை அருங்காட்சியகத்தில் தில்லி முதல்வர் அரவிந்த் கேஜரிவாலின் மெழுகு சிலை வைக்க அனுமதி கோரப்பட்டுள்ளது.** இங்கிலாந்து தலைநகர் லண்டனில் மேடம் டுசாட் மெழுகுச் சிலை அருங்காட்சியகம் உள்ளது. இந்த அருங்காட்சியகத்தில் மகாத்மா காந்தி, இந்திராகாந்தி, அமிதாப்பச்சன், ஷாருக்கான், சல்மான்கான், ஐஸ்வர்யா ராய், கரீனா கபூர், மாதுரி தீட்சித், ஹிரித்திக் ரோஷன், சச்சின் டெண்டுல்கர் போன்ற பிரபலங்களின் மெழுகு சிலைகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

- **நேதாஜி சுபாஷ் சந்திர போஸுக்கு "தேசத்தின் தலைவர்' என்ற பட்டம் கொடுக்கப்பட வேண்டும்** என்று மேற்குவங்க முதல்வரும், திரிணமூல் காங்கிரஸ் கட்சித் தலைவருமான மம்தா பானர்ஜி கோரிக்கை விடுத்தார்.
- **நேதாஜியின் 119ஆவது பிறந்த தின தினம் 23-01-2016 அன்று கொண்டாடப்பட்டது.** நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் தொடர்பாக மத்திய அரசிடம் உள்ள **100 ரகசிய ஆவணங்களை பிரதமர் நரேந்திர மோடி பொதுமக்கள் பார்வைக்காக பகிரங்கமாக வெளியிட்டார்.**

- இந்தியக் கடற்படைக்கு சொந்தமான மிகப்பெரிய விமானம் தாங்கி போர்க் கப்பலான **ஐஎன்எஸ் விக்கிரமாதித்யாவில், இலங்கை அதிபர் மைத்ரிபால சிறீசேனா 23-1-16 அன்று பயணித்தார்.** இதன் மூலம், இந்தியக் கடற்படையின் போர்க் கப்பலில் பயணித்த முதல் இலங்கை அதிபர் என்ற பெருமையை அவர் பெறுகிறார்.
- **குடியரசு தின விழாவில் பங்கேற்பதற்காக பிரான்ஸ் அதிபர் பிரான்சுவா ஹொலாந்தே 3 நாள் பயணமாக நேற்று இந்தியாவுக்கு வந்தார்.** சண்டீகர் வந்தடைந்த ஹொலாந் தேவை பஞ்சாப் மற்றும் ஹரியாணா மாநிலங்களின் ஆளுநர் கப்டன் சிங் சோலங்கி, மற்றும் ஹரியாணா முதல்வர் மனோகர் லால் கட்டார்

ஆகியோர் வரவேற்றனர். பின்னர் அங்குள்ள புகழ்பெற்ற **ராக் கார்டனில்** ஹொலாந்தேவை பிரதமர் நரேந்திர மோடி சந்தித்துப் பேசினார்.

- **இந்தியாவில் அதிக பணக்காரர்களை கொண்ட நகரம் மும்பை நியூ வேர்ல்டு வெல்த் ஆய்வில் தகவல்** : இந்தியாவின் நிதித் தலைநகர் மும்பையில் 41,200 பணக்காரர்கள் இருக்கிறார்கள் என்று `ஆசிய பசிபிக் 2016 வெல்த் ரிப்போர்ட்' ஆய்வில் தெரியவந்துள்ளது. நியூ வேர்ல்டு வெல்த், அதிக பணக்காரர்கள் வசிக்கும் நகரங்களை பற்றிய ஆய்வை சமீபத்தில் நடத்தியுள்ளது. இதில் மும்பை 12-வது இடத்தில் உள்ளது. தலைநகரமான டெல்லி 20,600 நபர்களுடன் 20-வது இடத்தில் இருப்பதாக இந்த ஆய்வில் கூறப்பட்டுள்ளது. மேலும் அந்த ஆய்வில் கூறியிருப்பதாவது: 10 லட்சம் டாலருக்கும் (ரூ.6.7 கோடி) அதிகமாக நிகர சொத்து மதிப்பு கொண்ட தனி நபர்களே இந்த ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். அதன்படி **இந்த பட்டியலில் டோக்கியோ நகரம் தான் முதலிடத்தில் உள்ளது**. இங்கு மொத்தம் 2,64,000 நபர்கள் உள்ளனர்.
- **ஆசிய பசிபிக் பிராந்தியத் தில் பணக்காரர்களின் எண்ணிக் கையில் இந்தியா நான்காவது இடத்தில் இருக்கிறது.** இந்த பட்டியலில் முதலிடத்தில் உள்ள ஜப்பானில் மொத்தம் 12,60,000 நபர்களும், இரண்டாவது இடத்தில் உள்ள சீனாவில் 6,54,000 பணக்காரர்களும் இருக்கின்றனர். ஆஸ்திரேலியா 2,90,000 பணக்காரர்களுடன் மூன்றாவது இடத்தில் உள்ளது.
- **சமையல் எரிவாயு உருளைக்கான தொகையை இணையவழியின் மூலம் செலுத்தும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது**. இந்தத் திட்டத்தை மத்திய எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சர் **தர்மேந்திர** தொடக்கி வைத்தார்.
- **இந்தியா - பிரான்ஸ்** நாடுகளுக்கிடையே ரபேல் ரக போர் விமானங்களை வாங்குவது, ரயில்வே, கலாச்சாரம், விண்வெளி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் உட்பட 14 முக்கிய ஒப்பந்தங்கள் டெல்லியில் நேற்று கையெழுத்தாகின.
- **வியட்நாமில் செயற்கைக்கோள் கண்காணிப்பு மையத்தை நிறுவுகிறது இந்தியா** : இந்திய புவி கண்காணிப்பு செயற் கைக்கோள்களின் புகைப்படத் தரவுகளை கையாளும் மையத்தை வியட்நாமில் இந்தியா அமைக்கி றது. இதன்மூலம் சீனா, தென் சீனக் கடல் பகுதிகளை கண்காணிக்க முடியும். சீனாவுடன் இந்தியா மற்றும் வியட்நாமுக்கு எல்லைப் பிரச்சினை கள் உள்ளன. இந்நிலையில், வியட்நாமில் அமைக்கப்படும் இந்த செயற்கைக்கோள் கண்காணிப்பு மையம் வியட்நாமுடனான இந்திய உறவை மேலும் வலுப்படுத்தும்.

www.tnpscportal.in

- **பிரான்ஸ் அரசு உதவியுடன் புதுச்சேரி, சண்டிகர், நாக்பூர் நகரங்களை 'ஸ்மார்ட் சிட்டியாக'** உருவாக்க இரு நாடுகளிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.
- **வன்கொடுமை தடுப்பு புதிய சட்டம் 26-1-2016 முதல் அமலுக்கு வந்தது** : எஸ்.சி., எஸ்.டி. பிரிவினர் மீதான கொடுமைகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வகை செய்யும் வன்கொடுமை தடுப்பு புதிய சட்டம் இன்று அமலுக்கு வருகிறது. 1989-ம் ஆண்டின் எஸ்சி, எஸ்டி (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத் திருத்த மசோதா மக்களவையில் கடந்த ஆண்டு ஆகஸ்ட் 4-ம் தேதியும் மாநிலங்களவை யில் டிசம்பர் 21-ம் தேதியும் நிறை வேறியது. இந்த மசோதாவுக்கு குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி கடந்த டிசம்பர் 31-ம் தேதி ஒப்புதல் அளித்தார். இதையடுத்து இந்த சட்டம் ஜனவரி 1-ம் தேதி அரசிதழில் வெளியானது.
- **2016ஆம் ஆண்டுக்கான பத்ம விபூஷண், பத்ம பூஷண், பத்ம ஸ்ரீ விருதுகள் அறிவிக்கப்பட்டன.**

  10 பேருக்கு பத்ம விபூஷண் விருதும், 19 பேருக்கு பத்ம பூஷண் விருதும், 83 பேருக்கு பத்ம ஸ்ரீ விருதும் அறிவிக்கப்பட்டுள்ளன. அதில் 19 பேர் பெண்கள். விருதுகள் விவரம் வருமாறு:

  - **பத்ம விபூஷண் விருது: நடிகர் ரஜினிகாந்த்,** வாழும் கலை அமைப்பின் நிறுவனர் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர், ரிலையன்ஸ் குழுமத்தின் நிறுவனர் மறைந்த திருபாய் அம்பானி, ஈநாடு ஊடகக் குழும அதிபர் ராமோஜி ராவ், பரதநாட்டியக் கலைஞர் யாமினி கிருஷ்ணமூர்த்தி, ஜம்மு-காஷ்மீர் மாநில முன்னாள் ஆளுநர் ஜக்மோகன், இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவன (டிஆர்டிஓ) முன்னாள் தலைவர் வி.கே. ஆத்ரே ஆகியோருக்கு பத்ம விபூஷண் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. புற்றுநோய் சிகிச்சை நிபுணரும், சென்னை அடையாறு புற்றுநோய் சிகிச்சை மையத்தின் தலைவருமான டாக்டர் சாந்தா, குச்சிபுடி நடனக் கலைஞர் கிரிஜா தேவி, அமெரிக்கவாழ் இந்தியப் பொருளாதார நிபுணர் அவிநாஷ் தீட்சித் ஆகியோரும் பத்ம விபூஷண் விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
  - **பத்ம பூஷண் விருது:** ஹிந்தி நடிகர் அனுபம் கெர், பாடகர் உதித் நாராயண் ஜா, மத்திய தலைமை கணக்குத் தணிக்கை அமைப்பின் (சிஏஜி) முன்னாள் தலைமை அதிகாரி வினோத் ராய், பென்னட் கால்மேன் குழுமத் தலைவர் இந்து ஜெயின், டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா, பேட்மின்டன் வீராங்கனை சாய்னா நெவால், ஆன்மிக குருமார்களான மறைந்த சுவாமி தயானந்த சரஸ்வதி, சுவாமி தேஜோமயானந்தா, இந்தியாவுக்கான அமெரிக்க முன்னாள் தூதர் ராபர்ட் பிளாக்வில் ஆகியோருக்கு பத்ம பூஷண் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. சிறப்க்

கலைஞர் ராம் வி. சுதார், மணிப்பூர் மாநில நாடகக் கலைஞர் ஹெஸ்நாம் கன்னையாலால், ஹிந்தி, தெலுங்கு மொழி எழுத்தாளர் யர்லகட்டா லட்சுமி பிரசாத், சம்ஸ்கிருத அறிஞர் என்.எஸ். ராமானுஜ தாத்தாசார்யா, பஞ்சாப் செய்தியாளர் பர்ஜிந்தர் சிங் ஹம்தர்த், இரைப்பை குடல் சிகிச்சை நிபுணர் டி. நாகேஸ்வர ரெட்டி, விஞ்ஞானி ஏ.வி. ராமா ராவ், தொழிலதிபர் பலோன்ஜி சபூர்ஜி மிஸ்திரி, மாருதி சுசூகி நிறுவனத் தலைவர் ஆர்.சி. பார்கவா, கட்டடக் கலை நிபுணர் ஹஃபீஸ் கான்டிராக்டர் ஆகியோரும் பத்ம பூஷண் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

- **பத்ம ஸ்ரீ விருது: தமிழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை**, டி.எஸ்.சந்திரசேகர், ஸ்ரீநிவாசன் தாமல் கந்தலை, அருணாசலம் முருகானந்தம், புதுச்சேரியைச் சேர்ந்த மெடலின் ஹெர்மன் டி பிலிக், தெலுங்கு திரைப்பட இயக்குநர் ராஜமௌலி, இயக்குநர் மதுர் பண்டார்கர், மும்பை தாக்குதல் சம்பவம் தொடர்பான வழக்கில் திறம்பட வாதாடிய அரசு வழக்குரைஞர் உஜ்வல் நிகம், ஹிந்தி நடிகர் அஜய் தேவ்கன், நடிகை பிரியங்கா சோப்ரா, மாஸ்டர் கார்டு நிறுவனத் தலைமைச் செயல் அதிகாரி அஜய்பால் சிங் பங்கா ஆகியோருக்கு பத்ம ஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இதேபோல், வில்வித்தை வீராங்கனை தீபிகா குமாரி, பரதநாட்டியக் கலைஞர் பிரதிபா பிரகலாத் உள்ளிட்டோருக்கும் பத்ம ஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

- **ஆஸ்திரேலியாவுக்கு இந்திய மெட்ரோ ரயில் பெட்டிகள் ஏற்றுமதி** : இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 6 மெட்ரோ ரயில் பெட்டிகள் மும்பை துறைமுகத்தில் இருந்து ஆஸ்திரேலியாவுக்கு கப்பல்கள் மூலம் முதல் முறையாக ஏற்றுமதி செய்யப்பட்டன.
- **உலகின் 50 பணக்காரர்கள்** பட்டியலை வெல்த் எக்ஸ் நிறுவனம் வெளியிட்டிருக்கிறது. இந்த பட்டியலில் மூன்று இந்தியர்கள் இடம்பெற்றுள்ளனர். முகேஷ் அம்பானி, திலீப் சாங்வி மற்றும் அசிம் பிரேம்ஜி ஆகியோர் உள்ளனர். **முகேஷ் அம்பானி 27-வது இடத்திலும், அசிம் பிரேம்ஜி 43-வது இடத்திலும், திலீப் சாங்வி 44-வது இடத்திலும் உள்ளனர்.**
- சட்டமேதை அம்பேத்கரின் 125-ஆவது ஆண்டு பிறந்த தினத்தையொட்டி, அவரது உருவம் பொறித்த 10 ரூபாய் நாணயத்தை ரிசர்வ் வங்கி விரைவில் வெளியிடவுள்ளது.



www.tnpscportal.in

- **ஐஎன்எஸ் விக்ராந்த் கப்பல் இரும்பை பயன்படுத்தி மோட்டார் சைக்கிள் தயாரிப்பு விரைவில் அறிமுகம் செய்கிறது பஜாஜ்.** மோட்டார் சைக்கிள் தயாரிப்பில் முன்னணியில் உள்ள பஜாஜ் ஆட்டோ நிறுவனம் புதிய ரக மோட்டார் சைக்கிளை அறிமுகப்படுத்த உள்ளது. இதற்கு ``வி” என இந்நிறுவனம் பெயர் சூட்டியுள்ளது. இந்திய ராணுவத்தின் முதலாவது விமானந்தாங்கி கப்பலான ஐஎன்எஸ் விக்ராந்த்-தின் இரும்பை பயன்படுத்தி இந்த மோட்டார் சைக்கிள் தயாரிக்கப்பட்டுள்ளதாக நிறுவனம் தெரிவித்துள்ளது. பிப்ரவரி 1-ம் தேதி இந்த மோட்டார் சைக்கிள் அறிமுகம் செய்யப்பட உள்ளதாக நிறுவனம் தெரிவித்துள்ளது.

- **காவல் துறையால் அலட்சியம் செய்யப்பட்ட பெண்களுக்கு எதிரான குற்றங்களை விசாரிக்க டெல்லி அரசு தனி ஆணையம் அமைத்துள்ளது.** மூன்று நபர் கொண்ட இந்த ஆணையத்துக்கு ஓய்வு பெற்ற **மாவட்ட நீதிபதி தினேஷ் தயாள் தலைவராக இருப்பார்.** இக்குழு கடந்த 2013 பிப்ரவரி மாதத்துக்குப் பிறகு நடைபெற்ற வன்முறை, பாலியல் அத்துமீறல், தொல்லை, தவறான நோக்குடன் உடலைப் பார்த்தல் உள்ளிட்ட பெண்களுக்கு எதிரான புகார்களை பெறும்.

- மகாமகப் பெருவிழாவை முன்னிட்டு பிப்ரவரி 18,19 ஆகிய தேதிகளில் **கும்பகோணத்தில் அகில பாரத துறவியர்கள் மாநாடு நடைபெற உள்ளது.**

- **2015 ஊழல் நாடுகள் பட்டியலில் 76-வது இடத்தில் இந்தியா உள்ளது.** டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் என்னும் அமைப்பு ஒவ்வொரு ஆண்டும் உலக நாடுகளின் ஊழல் நிலவரம் குறித்து தரவரிசை பட்டியலை வெளியிட்டு வருகிறது. 2015 ஆம் ஆண்டு தரவரிசைப் பட்டியல் கணக்கீட்டுக்காக 168 நாடுகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இதில் அந்த நாடுகளின் ஊழலற்ற நிர்வாகம், ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படுகிறது.ஐரோப்பிய நாடான டென்மார்க் தொடர்ந்து ஊழலற்ற நாடாக முதலிடத்தை பெற்றுள்ளது. பின்லாந்த் 2-வது இடத்தையும், சுவீடன் 3-வது இடத்தையும் பெற்றுள்ளது. ஊழல் நிறைந்த நாடுகள்: ஆப்பிரிக்க நாடான சோமாலியாவும், ஆசியா

www.tnpscportal.in

நாடான வடகொரியாவும் ஊழல் நிறைந்த நாடுகள் பட்டியலில் கடைசி 2 இடங்களைப் பிடித்துள்ளன. இதில் இந்தியாவுக்கு 76-வது கிடைத்துள்ளது.2014 ஆம் ஆண்டு 85-வது இடத்தில் இருந்த இந்தியா 9 இடங்கள் முன்னேறி உள்ளது.

- **இந்தியா-அமெரிக்கா இடையே 2004-ஆம் ஆண்டு செப்டம்பரில் மேற்கொள்ளப்பட்ட இரட்டை வரி விதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தத்தில் தற்போது திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.** இந்தத் திருத்தத்தை ஒப்புக் கொண்டு இருநாடுகளும் கையெழுத்திட்டுள்ளன. இந்தியா சார்பில் மத்திய நேரடி வரிவிதிப்பு வாரியத்தின் தலைவர் ஏ.கே.ஜெயின், அமெரிக்கா சார்பில் இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் ஆர்மென் மார்டிரோஸ்யான் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர். இந்த ஒப்பந்தத்தின் மூலம் எதிர்காலத்தில் இந்தியாவில் கருப்புப் பணம் உருவாவது பெருமளவில் தவிர்க்கப்படும்.

- ஹைதராபாத் பல்கலைக்கழகத்தில் தற்கொலை செய்துகொண்ட தலித் மாணவர் - **ரோஹித் வேமுலா**

- **நாட்டின் 67-வது குடியரசு தின விழா டெல்லியில் நடைபெற்றது.** இதில் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி தேசியக் கொடியேற்றினார். பிரான்ஸ் அதிபர் ஹொலாந்தே சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். குஜராத்தின் கிர் தேசிய பூங்காவில் உள்ள **ஆசிய சிங்கங்கள்**, மத்தியப் பிரதேசத்தின் **வெள்ளைப் புலி**, **தமிழகத்தின் தோடர் இன மக்கள்,** சட்டமேதை **டாக்டர் பி.ஆர்.அம் பேத்கரின்** பணிகள் மற்றும் **தூய்மை இந்தியா**, **டிஜிட்டல் இந்தியா** ஆகிய மத்திய அரசின் திட்டங் கள் ஆகியவற்றை பிரதிபலிக்கும் **அலங்கார ஊர்திகளின் அணி வகுப்பு** குடியரசு தினவிழாவில் முத்தாய்ப்பாக அமைந்தன.

- காஷ்மீரில் தீவிரவாதிகளுடனான சண்டையில் உயிரிழந்த ராணுவ வீரர் **மோகன் நாத் கோஸ்வாமிக்கு குடியரசு தின விழாவில் அசோக சக்ரா விருது வழங்கப்பட்டது.**

- மகாராஷ்டிர மாநிலம், நாகபுரி சிறையில் அடைக்கப்பட்டுள்ள **கைதிகளின் பெயரில் சேமிப்புக் கணக்குகள் தொடங்கப்பட்டு, அதற்கான ஏடிஎம் அட்டைகள் அவர்களுக்கு வழங்கப்பட்டன**.சிறைக் கைதிகளுக்கு ஏடிஎம் அட்டைகள் வழங்கப்படுவது மகாராஷ்டிர மாநிலத்தில் முதன்முறையாகும்.

- **ரூ.2 லட்சத்துக்கும் அதிகமான அரசு கொள்முதல் நடவடிக்கைகளுக்கு இணைய வழி மூலமே ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட வேண்டும்** என்ற புதிய நடைமுறை, வரும் **ஏப்ரல் 1-ஆம்** தேதி முதல் அமலுக்கு வரவுள்ளது.

- தொழுநோயாளிகளின் நலனுக்காக மத்திய சட்ட ஆணையத் தலைவராக இருந்தவர் - **நீதிபதி ஏ.பி.ஷா**.

- **மகாத்மா காந்தியின் 68-வது நினைவு தினம்** 30, ஜனவரி 2016 அன்று அனுசரிக்கப்பட்டது.
- **அமெரிக்க பல்கலை. மாநாட்டில் பேசுகிறார் நடிகர் கமல்** : பிப்ரவரி 6, 7-ம் தேதிகளில் **ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில்** இந்தியா குறித்த ஆண்டு மாநாடு நடைபெறுகிறது. இதில் வணிகம், திரைப்படம், அரசு நிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்தோர் பங்கேற்க உள்ளனர். இந்த மாநாட்டில் அமைச்சர் ரவிசங்கர் பிரசாத், நடிகர் கமல், சசி தரூர் உள்ளிட்ட பலர் உரையாற்ற உள்ளனர்.

- இந்த ஆண்டின் முதல் மான் கீ பாத் உரையை நாட்டுக்காக உயிர்நீத்த **தியாகிகளுக்கு அர்ப்பணித்தார் பிரதமர்** நரேந்திர மோடி. மான் கீ பாத் (மனதிலிருந்து பேசுகிறேன்) என்ற நிகழ்ச்சி மூலம் ஒவ்வொரு மாதம் கடைசி ஞாயிற்றுக்கிழமை வானொலி மூலம் நாட்டு மக்களுக்கு உரையாற்றி வருகிறார் பிரதமர் நரேந்திர மோடி
- ராணுவ முன்னாள் தலைமைத் தளபதியும், கடந்த 1971-ஆம் ஆண்டு நடைபெற்ற வங்கதேச விடுதலைப் போரில் முக்கியப் பங்காற்றியவருமான **கே.வி.கிருஷ்ணா ராவ், சனிக்கிழமை மாரடைப்பு ஏற்பட்டு தில்லியில் காலமானார்.**

- **தேசிய சூரிய ஒளி திட்டம் (National Solar Mission)** ன் இலக்கு 2022 ஆம் ஆண்டிற்குள் 20000 மெகாவாட் என்பது 100000 (ஒரு இலட்சம்) மெகாவாட் என மாற்றியமைக்கப்பட்டுள்ளது.
- **அமராவதியில் இந்தியாவின் முதல் நீருக்கடியிலான சுரங்கம்** கிருஷ்ணா நதியில் அமையவுள்ளது.
- **E-vahan Bima** எனப்படும் டிஜிட்டல்மயமான வாகன இன்சூரன்ஸ் திட்டத்தை செயல்படுத்தும் முதல் மாநிலம் எனும் பெருமையை தெலுங்கானா மாநிலம் பெற்றுள்ளது.
- **இந்தியா-நேபாளம் நாடுகளுக்கிடையேயான நட்பு ரீதியான பேருந்து சேவை 27 ஆண்டுகளுக்கு பின் மறுபடியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது** . இப்பேருந்து சேவையானது நேபாளத்தின் காஞ்சன்பூர் மற்றும் இந்தியாவின் சம்பாவட் மாவட்டம் (உத்தர்காண்ட்) மற்றும் ஆனந்த் விகார் (புது டில்லி) இடையே இயக்கப்படவுள்ளது.
- **பஞ்சாயத்து தேர்தலில் போட்டியிட வீட்டில் கழிவறை இருக்க வேண்டும்** எனும் தகுதியை பீகார் மாநில தேர்தல் கமிஷன் நிர்ணயித்துள்ளது.
- **19 வது தேசிய மின் ஆளுமைக்கான கூடுகை மஹாராஷ்டிராவின் நாக்பூர் நகரில் நடைபெற்றது.**
- 4 **வது இந்திய**-ஆப்ரிக்க ஹைட்ரோ கார்பன் மாநாடு புது டில்லியில் நடைபெற்றது.
- **கூகுள் தனது முதல் இலவச வைஃபை சேவையை மும்பை சென்ட்ரல் இரயில் நிலயத்தில் துவங்கியுள்ளது.** இச்சேவையை இரயில்வேயின் தொலைதொடர்பு பிரிவான 'ரயில்டெல்' உடன் இணைந்து வழங்கியுள்ளது.
- **இந்தியாவின் முதல் பார்வைதிறன் குறைவான பயணியருக்கு உகந்த வகையிலான இரயில் மைசூர் முதல் வாரணாசி வரை இயக்கப்பட்டது.**
- இந்தியாவிற்கு இங்கிலாந்திலிருந்து செலுத்தப்படும் பண உதவிகள் ஜனவரி1, 2016 முதல் நிறுத்தப்பட்டுள்ளன.
- 2016 ஆம் ஆண்டை **இந்திய-சீன சுற்றுலா ஆண்டாக** சீன சுற்றுலாத்துறை அறிவித்துள்ளது.
- **நடப்பாண்டில் இந்திய பொருளாதாரத்தின் வளர்ச்சி 7.5 சதவீதமாக** இருக்கும் என ஐ.எம்.எஃப் (IMF) கணித்துள்ளது.
- **உலகளவில் ஸ்டீல் (Steel) உற்பத்தியில் இந்தியா மூன்றாவது இடத்திலுள்ளது.** முதலிடத்தில் சீனா மற்றும் இரண்டாமிடத்தில் ஜப்பான் நாடுகள் உள்ளன.

# சர்வதேச நிகழ்வுகள்

- இலங்கையிலுள்ள சுரங்கத் திலிருந்து 1,404.49 கேரட் எடை யுள்ள நீலமணி கண்டறியப் பட்டுள்ளது. **உலகின் மிகப்பெரிய நீலமணி**யான இதன் மதிப்பு சுமார். ரூ.665 கோடியாகும். தெற்கு இலங்கையில் உள்ள ரத்தின நகரம் என அழைக்கப்படும் ரத்னபுராவில் இது கண்டறியப்பட்டது.
- **அணு குண்டை விட அதி பயங்கரமான ஹைட்ரஜன் வெடிகுண்டை வடகொரியா சோதித்து பார்த்துள்ளது.** வடகொரியா ஹைட்ரஜன் வெடி குண்டு சோதனை நடத்தியதற்கு இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட உலகின் அனைத்து முக்கிய நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளன.
- ஹிட்லரின் சுயசரிதையான **"மெயின் காம்ப்'** (எனது போராட்டம்) இரண்டாம் உலகப் போருக்குப் பின் முதல்முறையாக பிரசுரமாகி, பரபரப்பாக விற்பனையாகி வருகிறது.
- பிரசிலில் **ஸிக்கா வைரஸ்** தாக்கி 5 குழந்தைகள் பலியாகியுள்ளன. இந்த வைரஸ் கருவில் உள்ள குழந்தைகளின் மனநிலை பாதிப்பை ஏற்படுத்துதல், பெருமூளை வாதம், கண் பார்வை இழத்தல் மற்றும் கேட்கும் திறன் குறைதல் ஆகிய பாதிப்புகளை ஏற்படுத்துவதாக பிரேசில் விஞ்ஞானிகள் சமீபத்தில் ஆய்வு நடத்தியுள்ளனர். மார்ச் 2014-ம் ஆண்டு லத்தீன், அமெரிக்கா, ஆப்பிரிக்காவில் **Aedes aegypti கொசு** மூலம் இந்த வைரஸ் நோய் பரவியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.
- **ஜப்பானில் வாழ்ந்து வந்த உலகின் அதிக வயதான முதியவர் நேற்று மாரடைப்பால் உயிரிழந்தார்.** உலகின் அதிக வயதான முதியவர் என கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்த பெருமை பெற்றவர் யஷூதரோ கொய்டே (112). ஜப்பானின் சைதமா மாகாணத்தில் வாழ்ந்து வந்த 112 வயது சகாரி மோமோய் உயிரிழந்ததை அடுத்து, அந்த பெருமை அவருக்கு சென்றது.
- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட **அதிநவீன ஏவுகணையின்** சோதனை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதாக **பாகிஸ்தான்** தெரிவித்துள்ளது.**"ஹட்ஃப் - 8'** எனப் பெயரிடப்பட்டுள்ள அந்த ஏவுகணையானது, 350 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இலக்குகளையும் துல்லியமாகத் தாக்கும் திறன் கொண்டது.
- நேபாளத்தில் புதிதாக பிரகடனப்படுத்தப்பட்ட **அரசியல் சாசனத்தின் முதலாவது திருத்த மசோதா** அந்நாட்டு நாடாளுமன்றத்தில் 23-1-16 அன்று நிறைவேறியது.

www.tnpscportal.in

- போர்ச்சுகலில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் மார்செலோ ரெபலோ டிசெளஸா வெற்றியடைந்துள்ளார்.
- **ஜிகா வைரஸ் : பிரேசில், அமெரிக்கா உட்பட 25 நாடுகளில் வேக மாகப் பரவி வருகிறது.** 1947-ல் உகாண்டாவில் உள்ள ஜிகா காட்டில் குரங்குகளிடம் இந்த வைரஸ் முதல்முறையாக கண் டறியப்பட்டது. இதனால் வைர ஸுக்கு ஜிகா என்று பெயரிடப் பட்டது. ஆப்பிரிக்காவிலும் ஆசியா வின் சில நாடுகளில் மட்டுமே இந்த வைரஸ் பாதிப்பு இருந்தது. இந்நிலையில் தென்அமெரிக்க நாடான பிரேசிலில் கடந்த ஆண்டு மே மாதம் ஜிகா வைரஸ் கண்டு பிடிக்கப்பட்டது. டெங்கு காய்ச் சலை பரப்பும் ஏடிஎஸ் கொசுக்களே ஜிகா வைரஸையும் பரப்புகின்றன. உடல் உறவு மூலமும் வைரஸ் தொற்றுகிறது என்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது.
- **டொயோட்டா மோட்டார் கார்ப்பரேஷன் நிறுவனம், உலக அளவிலான வாகன விற்பனையில் மீண்டும் முதலிடத்தைத் தக்க வைத்துள்ளது.** கடந்த ஆண்டில் இந்த நிறுவனம் 1.015 கோடி வாகனங்களை விற்பனை செய்துள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளாக தொடர்ந்து இந்த நிறுவனம் வாகன விற்பனையில் முதலிடத்தில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.
- **எதிர்மறை வட்டி விகிதத்துக்கு மாறியது ஜப்பான்** வங்கியில் டெபாசிட் செய்தால் கூடுதல் தொகை செலுத்த வேண்டும் : பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் வகையில் அதிரடி நடவடிக்கையில் இறங்கியுள்ளது ஜப்பான் மத்திய வங்கி. பணவீக்கத்தை 2 சதவீதமாக உயர்த்துவதற்கு ஜப்பான் இலக்கு நிர்ணயம் செய்துள்ளது. அதனைத் தொடர்ந்து எதிர்மறை வட்டி விகிதத்தை வெள்ளிக்கிழமை அறி முகம் செய்தது ஜப்பான். இதன் மூலம் வங்கியில் டெபாசிட் செய் யப்படும் தொகைக்கு கூடுதல் தொகை செலுத்த வேண்டி இருக்கும். வங்கியில் வைத்திருக் கும் தொகைக்கு 0.1 சதவீத கட்ட ணம் செலுத்த வேண்டி இருக்கும். அதனால் மக்கள் வங்கியில் பணத்தை வைத்திருக்காமல் செலவு செய்வார்கள். தொழில் நிறுவனங்களுக்கும் எளிதில் கடன் கிடைக்கும் என்பது பொருளாதார கோட்பாடாகும். ஜப்பான் மத்திய வங்கியின் நடவடிக்கை காரணமாக வெள்ளிகிழமை சர்வதேச அளவில் பங்குச்சந்தைகள் உயர்ந்து முடிந்தன.

- உலக மனித மேம்பாட்டு அறிக்கை 2015 ன் படி (Global Human Development Report 20150 தெற்கு ஆசியாவிலேயே அதிக புள்ளிகளைப்பெற்று (73 வது இடம்) இலங்கை முன்னிலையில் உள்ளது. இவ்வறிக்கையில் இந்தியா 130 வது இடத்திலுள்ளது.
- உலகின் பணக்காரர்கள் பட்டியலில் **பில்கேட்ஸ்** முதலிடத்திலுள்ளார். மிக இளவயது பணக்காரராக பேஸ்புக் நிறுவனர் மார்க் ( 8 வது இடம்) சக்கர்பர்க் உள்ளார்.

## முக்கிய நியமனங்கள்

- திரைப்பட தணிக்கை அமைப் பான சென்சார் போர்டை சீரமைக்க பிரபல இயக்குநர் **ஷியாம் பெனகல்** தலைமையில் சிறப்பு குழு நியமிக்கப்பட்டுள்ளது.
- புணேவில் உள்ள மத்திய திரைப்பட மற்றும் தொலைக்காட்சி கல்வி நிறுவனத்தின் (எஃப்டிஐஐ) தலைவ ராக பாஜகவைச் சேர்ந்த **கஜேந்திர சவுகான்** பொறுப்பேற்றுக் கொண்டார்.
- இஸ்ரேலுக்கான புதிய இந்தியத் தூதராக மூத்த தூதரக அதிகாரி **பவன் கபூர்** நியமிக்கப்பட்டுள்ளார்.
- **மக்கள்தொகைக் கணக்கெடுப்பு தலைமைப் பதிவாளராக** மூத்த ஐஏஎஸ் அதிகாரி சைலேஷ், வியாழக்கிழமை நியமிக்கப்பட்டார்.
- **'நிடி ஆயோக்' அமைப்பின் புதிய தலைமை செயல் அதிகாரி**யாக, தொழில் கொள்கை மற்றும் மேம்பாட்டு துறையின் செயலரான **அமிதாப் காந்த்** நியமிக்கப்பட்டுள்ளார்.மத்திய, மாநில அரசின் திட்டங்களுக்கு, நிதி ஒதுக்கீடு செய்யும், மத்திய திட்ட கமிஷன் கலைக்கப்பட்டு அதற்கு பதிலாக, 'நிடி ஆயோக்' என்ற அமைப்பு, கடந்த ஆண்டு உருவாக்கப்பட்டது. **இதன், முதல் தலைமை செயல் அதிகாரியாக சிந்துஸ்ரீ குலாலர் நியமிக்கப்பட்டார்.** அவரது பதவிக்காலம் நிறைவு பெற்றதால், அந்த இடத்திற்கு, மத்திய அரசில், தொழில் கொள்கை மற்றும் மேம்பாட்டு துறையின் செயலராக பதவி வகித்த அமிதாப் காந்த் நியமிக்கப்பட்டுள்ளார். **'நிடி ஆயோக்'கின் தலைவராக பிரதமர் நரேந்திர மோடி உள்ளார்.**
- **மத்திய தலைமைத் தகவல் ஆணையராக பாதுகாப்புத் துறை முன்னாள் செயலர் ஆர்.கே.மாத்தூர் பதவியேற்றார்.** இவருக்கு குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

www.tnpscportal.in

- கல்பாக்கத்தில் உள்ள சென்னை அணுமின் நிலைய புதிய இயக்குநராக **ரவி சத்யநாராயணா** சனிக்கிழமை பொறுப்பேற்றார்.

- தில்லி ஜவர்ஹலால் நேரு பல்கலைக்கழகத்தின் புதிய துணை வேந்தராக **ஜெகதீஸ் குமார் நியமனம்** செய்யப்பட்டுள்ளார்.
- **சீனாவுக்கான இந்தியத் தூதராக** விஜய் கேசவ கோகலே பதவியேற்றுக் கொண்டார்.
- இந்திய முறை மருத்துவத்துக்கான மருந்துகள் தயாரிப்புக்கு உரிமம் வழங்கும் அலுவலராக **பிச்சையாகுமார்** நியமிக்கப்பட்டுள்ளார்.

## விருதுகள் / மரியாதைகள்

- புற்றுநோய் தொடர்பாக ஆராய்ச்சி யில் ஈடுபட்டு வரும் இந்திய வம்சாவளி பிரிட்டன் ஆய்வாளர் மற்றும் இங்கிலாந்தில் உள்ள கேன்சர் ரிசர்ச் யுனைடெட் கிங்டம் (சிஆர்யுகே) அமைப்பின் தலைமை நிர்வாகியான **ஹர்பல் சிங் குமாருக்கு, இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிஸபெத் நைட்ஹூட் பட்டம்** அறிவித்துள்ளார்.

- **இசைஞானி இளையராஜாவுக்கு** கேரள அரசு **நிஷாகாந்தி புரஸ்கரம் விருது** அறிவித்துள்ளது.

- பிரபல பாலிவுட் நடிகை **பிரியங்கா சோப்ரா**, அமெரிக்காவில் வழங்கப்படும், **'மக்களின் மனம் கவர்ந்த நடிகை'** என்ற விருதை வென்றுள்ளார். இதன்மூலம், இவ்விருதை பெற்ற முதல் இந்திய நடிகை என்ற பெருமை, அவருக்கு கிடைத்துள்ளது.
- சென்னையில் நடைபெற்ற 13-ஆவது சர்வதேச திரைப்பட விழாவில் சிறந்த திரைப்படமாக **"கிருமி'** தேர்வு செய்யப்பட்டது. சிறந்த நடிகைக்கான விருதை நடிகை **நயன்தாரா** பெற்றார்.

- ராஜபாளையத்தைச் சேர்ந்த **டாக்டர் கு.கணேசனுக்கு 2015-ம் ஆண்டுக்கான 'தேசிய அறிவியல் தொழில்நுட்பத் தொடர்பியல் விருது'** வழங்கப்படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

- **அனுராதா கபூருக்கு விருது** : மதுரையைச் சேர்ந்த நிகழ் நாடக மையம், ஜே. வசந்தன் பவுண்டேஷன், மதுரை மீடியா ஃபிலிம் அகாடமி ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து, நாடகத் துறையில் சிறப்பாகப் பணியாற்றிவரும் ஆளுமைகளைக் கவுரவிக்கும் வகையில் வாழ்நாள்

சாதனையாளர் விருதை வழங்குகிறது. இந்த ஆண்டுக்கான விருதை டெல்லி தேசிய நாடகப் பள்ளியின் முன்னால் இயக்குநரும் இந்தியாவின் முக்கியமான நாடக ஆளுமையான அனுராதா கபூர் பெற்றுள்ளார். மதுரையில் 17.01.2016 அன்று நடைபெற்ற விழாவில் அனுராதா கபூர் இவ்விருதைப் பெற்றுக்கொண்டார்.

- **இ. மயூரநாதனுக்கு இயல் விருது 2015** : கனடா தமிழ் இலக் கியத் தோட்டத் தின் வாழ்நாள் சாதனை யாளர் விருதான இயல் விருது இம்முறை இ.மயூரநாதனுக்கு வழங்கப்படுகிறது. அவர் தமிழ் விக்கிப் பீடியா என்னும் இணையதளக் கலைக்களஞ்சிய கூட் டாக்கத் திட்டத்தைத் தொடங்கி வெற்றிகரமாக இயக்கிவருகிறார். தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 17-வது இயல் விருது இது. இலங்கையில் வண்ணார்பண்ணை என்னுமிடத்தில் பிறந்த மயூரநாதன் 1993-ல் துபாய்க்குப் புலம்பெயர்ந்த பின்னர் தமிழ் அறிவியல் துறையில் கட்டுரைகள் எழுத ஆரம்பித்தார். ஆங்கில் விக்கிப்பீடியாவால் தூண்டப்பட்டு தமிழ் விக்கிப்பீடியாவை 2003-ம் ஆண்டில் தொடங்கினார்.
- உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன முன்னாள் இயக்குநர் முனைவர் ச.வே.சுப்பிரமணியனுக்கு (ச.வே.சு) **தமிழாய்வுச்சிகரம்** விருதும், கோ.பெ.நா.வுக்கு **தமிழியக்கச் சிற்பி** என்ற விருதையும், முனைவர் புனிதா ஏகாம்பரத்துக்கு செந்தமிழ்ச்செம்மல் என்ற விருதையும், வைஜெயந்திராஜனுக்கு **பாரதி கண்ட புதுமைப்பெண் என்ற விருதையும்**, க. கோபாலுக்கு கல்வி ஞாயிறு என்ற விருதும் வழங்கப்பட்டது.
- **2015 ஆம் ஆண்டிற்கான சங்கீத கலாநிதி விருது** சஞ்சய் சுப்ரமணியன் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது,
- **தேசிய மின் ஆளுமை விருது 2015-16** தொழிலாளர் வைப்பு நிதி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

# முக்கிய தினங்கள்

- **உலக பிரெய்லி தினம்** (பார்வையற்றோருக்கான எழுதும் முறையை அறிமுகப்படுத்திய லூயிஸ் பிரைய்லி பிறந்த தினம்) - ஜனவரி 4
- **சர்வதேச வேட்டி தினம்** - ஜனவரி 6
- **வெளிநாடுவாழ் இந்தியர் தினம்** - ஜனவரி 9,
- **தேசிய இளைஞர் தினம் (சுவாமி விவேகானந்தரின் பிறந்த தினம்** - ஜனவரி 12
- **ராணுவ தினம்** -ஜனவரி 15
- **திருவள்ளுவர் தினம் -**தை மாதம் 2ம் நாள் (ஜனவரி -16, 2016)
- **தேர்தல் ஆணையம் (Election Commission) தினம்** - ஜனவரி 17
- **நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் பிறந்த (Netaji Subhash Chandra Bose) தினம்** - ஜனவரி 23
- **தேசிய பெண் குழந்தைகள் தினம் - ஜனவரி 24**
- **தேசிய வாக்காளர் (National Voters) தினம்** - ஜனவரி 25
- **நாட்டின் 67-ஆவது குடியரசு தினம், சர்வதேச சுங்கவரி தினம் -** 26-01-2016
- **தியாகிகள் நாள் (Martyr's Day), உலக தொழுநோய் ஒழிப்புதினம் -** ஜனவரி 30

# அறிவியல் தொழில்நுட்பம்

- **2016 லீப் ஆண்டாகும்.** 366 நாட்கள் கொண்ட ஆண்டு லீப் ஆண்டு என்றும் 365 நாட்கள் கொண்டதை சாதாரண ஆண்டு என்றும் அழைக்கப்படும். சூரியனை பூமி சுற்றிவர 365¼ நாட்கள் ஆவதால் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை லீப் ஆண்டு வரும்.
- **விண்வெளிக்குச் செலுத்திய ராக்கெட்டை பூமிக்குக் கொண்டுவருவது சாத்தியமாகியிருக்கிறது - ராக்கெட் துறையில் புதிய சாதனை** : அமெரிக்காவில் 'ஸ்பேஸ் - எக்ஸ்' எனும் நிறுவனம் உயரே செலுத்திய **'பால்கன் 9'** எனும் ராக்கெட் இந்தச் சாதனையை நிகழ்த்தியுள்ளது. உயரே கிளம்பும்போது எவ்விதம் நெருப்பைக் கக்கியபடி மேலே சென்றதோ அதேபோல நெருப்பைக் கக்கியபடி செங்குத்தாகக் கீழ் நோக்கி இறங்கி, மெல்லத் தரையில் வந்து உட்கார்ந்துகொண்டது. இந்த ராக்கெட்டைப் புதுப்பித்து மறுபடி உயரே செலுத்த

முடியும். தாங்கள் உருவாக்கியுள்ள புதிய தொழில்நுட்பத்தின்படி ஒரே ராக்கெட்டை 40 தடவை பயன்படுத்த முடியும் என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

- **சீனாவுக்கான '.சிஎன்' என்ற டொமைன் உலக அளவில் அதிகமாக பயன்படுத்தப்படுவது** தெரியவந்துள்ளது. ஜெர்மனியின் '.டிஇ' டொமைன் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளது.சீன இணையதள தொலை தொடர்பு தகவல் மையம் வெளி யிட்ட அறிக்கையில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் ஜெர்மனியின் '.டிஇ' டொமைனில் தான் அதிக எண் ணிக்கையில் இணையதளங்கள் பதிவு செய்யப்பட்டு வந்தன. அதனை கடந்த ஆண்டு சீனா முறிய டித்து முதலிடத்தை பிடித்தது. சீனாவின் டொமைனை அந்நாட்டின் கல்வி நிறுவனங்கள் மட்டுமின்றி, ஆப்பிள், மைக்ரோசாப்ட், அமேசான், சிட்டிபேங்க் போன்ற சர்வதேச நாடுகளை சேர்ந்த நிறு வனங்களும் பயன்படுத்தி வருகின்றன. சீனாவில் 67 கோடி பேர் இணையதளத்தை பயன்படுத்து கின்றனர்
- **ஆஸ்திரேலிய தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள், பூமியை விட வயதான விண்கல்லை அகழ்வாராய்ச்சியின்போது தோண்டியெடுத்துள்ளனர்.** 1.7 கிலோகிராம் எடை கொண்ட அந்த விண்கல், 4.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.
- **கடல் ஆய்வுக்கான 'ஐஆர்என் எஸ்எஸ்-1' செயற்கைக் கோள், பிஎஸ்எல்வி-சி31 ராக்கெட் மூலம் ஏவப்பட்டது.** கடல்சார் ஆராய்ச்சிக்காக ஐஆர்என்எஸ்எஸ் வகையை சேர்ந்த 7 செயற்கைக் கோள் களை விண்ணில் செலுத்த இந்திய விண்வெளி ஆய்வு மையம் (இஸ்ரோ) திட்டமிட்டுட்டது. இதில் முதலாவதாக, ஐஆர்என்எஸ்எஸ்-1ஏ செயற்கைக் கோள் 2013 ஜூலையிலும், 1பி 2014 ஏப்ரலிலும், 1சி 2014 அக்டோ பரிலும், 1டி 2015 மார்ச்சிலும் விண்ணில் செலுத்தப்பட்டன. இந்த வரிசையில் 5-வதாக ஐஆர்என்எஸ்எஸ்-1இ செயற் கைக் கோள் ஆந்திர மாநிலம் ஹறிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இருந்து பிஎஸ்எல்வி-சி31 ராக்கெட் மூலம் ஜனவரி 20-ம் தேதி ஏவப்பட்டது. இதன் ஆயுட்காலம் 12 ஆண்டுகள். இதன்மூலம் இயற்கை சீற்றம், இயற்கை பேரிடர் மேலாண்மை, கடல்சார் செயல்பாடுகளை கண்காணிக்க முடியும்.

- **எஸ்.பி.எஸ். (Standard Positioning System) :** இந்தியாவின் பிரத்யேக செயற்கைகோள் வழிகாட்டியாக அறிமுகப்படுத்தப்படவுள்ள எஸ்.பி.எஸ். (Standard Positioning System) செல்லிடப்பேசியில் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகளை இஸ்ரோ விஞ்ஞானிகள் மேற்கொணன்டு வருகின்றனர்.இதன் மூலம் அமெரிக்காவின் ஜி.பி.எஸ். (Global Positioning System) வழிக்காட்டியை நாம் பயன்படுத்தாமல், நம் நாட்டின்

பிரத்யேக எஸ்.பி.எஸ். வழிக்காட்டியை பொது மக்கள் பயன்படுத்தும் சூழ்நிலை விரைவில் உருவாகும் என, இஸ்ரோ விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

- **சர்வதேச விண்வெளி நிலையத் தில் ஜின்னியா பூவை மலர வைத்து, நாசா விஞ்ஞானிகள் சாதனைபுரிந்துள்ளனர்.** பல்வேறு நாடுகளின் கூட்டுப்பங்களிப்பில் விண்வெளி யில், சர்வதேச விண்வெளி நிலை யம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு, ஜின்னியா ரக செடியை நாசா விஞ்ஞானிகள் நட்டு வளர்த்தனர். தற்போது, விண்வெளியில், முதல் பூ மலர்ந்துள்ளது. ஆரஞ்சு வண்ணத்தில் மலர்ந்துள்ள இந்த ஜின்னியாதான் பூமிக்கு அப்பால் மலர்ந்த முதல் மலராகும். இந்த மலரை அமெரிக்க விண்வெளி வீரர் ஸ்காட் கெல்லி புகைப்படம் எடுத்து அதனை, ட்விட்டரில் வெளியிட்டுள்ளார். மைக்ரோகிராவிட்டி எனப்படும் நுண்ணீர்ப்பு விசையில் தாவரங் களும் மலர்களும் எப்படி வளர்கின் றன என்பதை விஞ்ஞானிகள் புரிந்து கொள்ள வாய்ப்பாக நாசா விஞ்ஞானிகள் இந்த மலர்ச் செடியை சர்வதேச விண்வெளி நிலையத்தில் வளர்த்துள்ளனர்.
- **சூரியக்குடும்பத்தில் 9-வது கிரகத்தை நாசா விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.** பிளானட் நைன் எனப் பெயரிடப்பட்டுள்ள அந்த கிரகம், பூமியைப் போன்று 10 மடங்கு திணிவைக் (மாஸ்) கொண்டது. **பிளானட் நைன்**, சூரியனி லிருந்து நெப்டியூனைவிட 20 மடங்கு தொலைவில் உள்ளது.
- **நடப்பாண்டில் 5 கிரகணங்கள் நிகழவிருக்கின்றன.** இவற்றில் இரண்டு மட்டுமே இந்தியாவில் தெரியும் என கூறப்பட்டுள்ளது. வரும் மார்ச் 9-ம் தேதி சூரிய கிரகணம் நிகழும். இது, வடகிழக்கு மாநிலங்களில் ஒரு சில பகுதிகளில் தெரியும். மார்ச் 23-ம் தேதி முழு சந்திரகிரகணம், இது இந்தியாவில் தெரியாது. இதைத்தொடர்ந்து ஆகஸ்ட் 18-ம் தேதி முழு சந்திரகிரகணம், செப்டம்பர் 1-ம் தேதி சூரிய கிரகணம் நிகழவுள்ளன. இவை இரண்டும் இந்தியாவில் தெரியாது. செப்டம்பர் 16-ம் தேதி நடை பெறவுள்ள முழு சந்திரகிரகணம் இந்தியாவில் தெரியும். கடந்த ஆண்டு நான்கு கிரகணங்கள் ஏற்பட்டன. இவற்றில் இரண்டு முழு சந்திர கிரகணம். ஒன்று முழு சூரிய கிரகணம், மற்றொன்று பாதி சூரிய கிரகணம்.
- **நீர்நிலை பாசிகளால் டிமென்ஷியா எனும் நினைவிழப்பு நோய் ஏற்படுகிறது என்று பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.** இந்த நோயால் பாதிக்கப்பட்ட வர்களின் ஞாபகத் திறன், செயல் திறன் படிப்படியாக குறைந்து ஒரு கட்டத்தில் உடல் உணர்வற்று போகும். பொதுவாக முதுமை, மரபணு ஆகியவற்றின் காரண மாகவே டிமென்ஷியா பாதிப்பு ஏற்படுகிறது. இவை தவிர நீர்நிலை, கடலில் வளரும் பாசிகளாலும் இந்நோய் பாதிப்பு ஏற்படுவதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். ஏரிகள், கடலில் காணப்படும் நீல-பச்சை நிற பாசிகளில் பீட்டா-என்-மீத்தேல்மினோ-

எல்-அலைனி (பி.எம்.ஏ.ஏ.) எனும் அமிலம் உள்ளது. இது மனிதனின் மூளையைப் பாதிக்கும் நச்சு அமிலம் ஆகும்.

- **"ஆகாஷ்' ஏவுகணை சோதனை வெற்றி** : தரையில் இருந்து வான்பரப்பில் உள்ள எதிரிகளின் இலக்குகளைத் தாக்கும் திறன்கொண்ட, உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஆகாஷ் ஏவுகணை, ஒடிஸா மாநிலம், சந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த சோதனை மையத்தில் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.

## விளையாட்டுகள்

- **2015ம் ஆண்டின் சிறந்த வீரராக இந்திய அணியின் டெஸ்ட் கேப்டன் விராட் கோலியை** பிசிசிஐ தேர்வு செய்துள்ளது. அதேவேளையில் **மகளிர் கிரிக்கெட்டில் மிதாலி ராஜ்** சிறந்த வீராங்கனையாக தேர்வாகி உள்ளார்.

- சர்வதேச கால்பந்து போட்டிகளில் நடுவராக செயல்பட திண்டுக் கல்லை சேர்ந்த **ஜி. ரூபாதேவி** என்ற கால்பந்து வீராங்கனை தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

- பெல்ஜியத்தில் நடந்த பிளமிஸ் ஓபன் வாள்வீச்சு போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற **சி.ஏ.பவானி தேவிக்கு** ரூ.2 லட்சம் ஊக்கத் தொகையை முதல்வர் ஜெயலலிதா வழங்கினார்

- **இந்திய கிரிக்கெட் வாரியத்தை** (பிசிசிஐ) **முறைப்படுத்த அமைக்கப்பட்ட லோதா குழு,** உச்ச நீதிமன்றத்தில் தனது அறிக்கையை தாக்கல் செய்துள்ளது.கடந்த 2013-ஆம் ஆண்டு நடைபெற்ற ஐபிஎல் போட்டியில் சூதாட்டம் நடைபெற்றதாக புகார் எழுந்தது. அது தொடர்பாக விசாரணை நடத்திய முன்னாள் **நீதிபதி முத்கல் தலைமையிலான குழு**, தனது அறிக்கையைத் தாக்கல் செய்தது. அந்த அறிக்கையின் அடிப்படையில், **நீதிபதி ஆர்.எம்.லோதா தலைமையிலான மூவர் குழு**, **சென்னை சூப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் ராயல்ஸ் ஆகிய அணிகளை ஐபிஎல் போட்டிகளில் இருந்து 2 ஆண்டுகளுக்கு இடைநீக்கம் செய்து உத்தரவிட்டது.** பிசிசிஐ அமைப்பிலும், அதன் செயல்பாட்டிலும் செய்ய வேண்டிய மாற்றங்கள் குறித்து பரிந்துரைக்கும்படி லோதா குழுவுக்கு, உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இதற்காக, ஓய்வு பெற்ற நீதிபதிகள் ஆர்.எம்.லோதா, அசோக் பான், ரவீந்திரன் ஆகியோர் கொண்ட குழு நியமிக்கப்பட்டது.

www.tnpscportal.in

- **தெற்காசிய கால்பந்து சம்மேளன (எஸ்ஏஎஃப்எஃப்) சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய அணி 7-வது முறையாக சாம்பியன்** பட்டம் வென்றது. திருவனந்தபுரத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் இந்தியா அணி 2-1 என்ற கோல் கணக்கில் நடப்பு சாம்பியன் ஆப்கானிஸ்தானை தோற்கடித்தது.

- பள்ளிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டியில் 15 வயதான மும்பை மாணவர் **பிரணவ் தனவேட்**1009 ரன்கள் குவித்து வரலாற்று சாதனை படைத்தார். மும்பையில் ஹெச்.டி.பண்டாரி கோப்பைக்கான பள்ளிகள் இடையிலான கிரிக்கெட் போட்டி மும்பை கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்பட்டு வருகிறது. இதில் கே.சி. காந்தி பள்ளி அணிக்காக விளையாடிய 15 வயதான **பிரணவ் தனவேட்**, ஆர்ய குருகுல பள்ளிக்கு எதிரான ஆட்டத்தில் 323 பந்துகளில், 129 பவுண்டரிகள், 59 சிக்ஸர்களுடன் 1009 ரன்கள் குவித்து சாதனை படைத்தார். 395 நிமிடங்கள் களத்தில் நின்ற பிரணவின் ஸ்டிரைக் ரேட் 312.38 ஆகும்.
- பெண்களுக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் துப்பாக்கி சூடுதல் போட்டி ஸ்வீடனில் நடைபெற்றது. இதில் இந்தியாவின் **அபூர்வி சண்டிலா**, சீன வீராங்கனையின் சாதனையை முறியடித்து தங்கம் வென்றார்.
- ஃபிஃபா தரவரிசைப் பட்டியலில் இந்திய கால்பந்து அணி 3 இடங்கள் முன்னேறி 163ஆவது இடத்தைப் பிடித்தது.
- ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் நகரில் நடைபெற்ற மகளிருக்கான பிரிஸ்பேன் கோப்பை டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **சானியா மிர்ஸா-சுவிட்ஸர்லாந்தின் மார்ட்டினா ஹிங்கிஸ்** இணை சனிக்கிழமை பட்டம் வென்றது.
- **தமிழக வாள்வீச்சு வீராங்கனை பவானிதேவியை ஒலிம்பிக் மற்றும் சர்வதேச போட்டிகளுக்கு தயார்படுத்தும் வகையில் அவரை உயர்மட்ட விளையாட்டு வீரர் சிறப்பு ஊக்க உதவித்தொகைத் திட்டத்தில் சேர்க்க முதல்வர் ஜெய லலிதா ஆணையிட்டுள்ளார்.** இதன் மூலம், பவானிதேவிக்கு ஆண்டுக்கு ரூ.25 லட்சம் நிதியுதவி கிடைக்கும்.

- **பிரிஸ்பேன் சர்வதேச டென்னிஸ் போட்டியின்** ஒற்றையர் பிரிவில் சுவிட்ஸர்லாந்தின் ரோஜர் ஃபெடரரை வீழ்த்தி பட்டம் வென்றார் கனடாவின் மிலோஸ் ராவ்னிக்.

- சென்னையில் நடைபெற்ற சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியின் இரட்டைப் பிரிவு இறுதி ஆட்டத்தில் **ஆஸ்திரியாவின் ஆலிவர் மராச்-பிரான்ஸின் ஃபேப்ரைஸ் மார்ட்டின் இணை அமெரிக்காவின் ஆஸ்டின் கிராஜிசெக் - பிரான்ஸின் பெனாய்ட் பேர் இணையை** 6-3, 7-5 **என்ற செட் கணக்கில் வென்றது. மேலும்** நான்காவது முறையாக சாம்பியன் பட்டம் வென்றுள்ள **சுவிட்ஸர்லாந்தின் ஸ்டான் வாவ்ரிங்கா**, சென்னை ஓபன் போட்டியில் தான் கடைசியாக பங்கேற்ற 12 ஆட்டங்களிலும், ஒரு செட்டைகூட இழக்காமல் வெற்றி பெற்றுள்ளார்.

- சர்வதேச மகளிர் இரட்டையர் டென்னிஸ் தரவரிசையில் இந்திய வீராங்கனை **சானியா மிர்சா** 11,395 புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார்.

- தேசிய அளவில், **துப்பாக்கி சுடும் போட்டியில், தங்கம் வென்ற ரித்திக்கிற்கு, நான்கு லட்சம் ரூபாய் ஊக்கத்தொகை** வழங்க, முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.மத்திய பிரதேசம், இந்துாரில், 17 வயது பள்ளி மாணவர்களுக்கான, தேசிய அளவிலான துப்பாக்கி சுடும் போட்டியில், 10 மீட்டர், 'ஓபன் சைட் ஏர் ரைபிள்' போட்டியில், சென்னையை சேர்ந்த ரித்திக், தங்கப்பதக்கம் வென்றார்.

- 2015-ம் ஆண்டுக்கான உலகின் தலைசிறந்த கால்பந்து வீரருக்கான விருதை ஆர்ஜென்டின வீரர் **லயோனல் மெஸ்ஸி** பெற்றுள்ளார். அவர் இந்த விருதைப் பெறுவது 5-வது முறையாகும்.

- **சானியா-ஹிங்கிஸ்** இணைந்து, சர்வதேச டென்னிஸ் அரங்கில் தொடர்ந்து அதிக வெற்றிகள் (29) பெற்ற பெண்கள் இரட்டையர் ஜோடி என புதிய வரலாறு படைத்தனர்.

- **டெஸ்ட் கிரிக்கெட் போட்டிக்கான தரவரிசையில் இந்திய அணி** 5 **ஆண்டுகளுக்குப் பிறகு முதலிடத்துக்கு முன்னேறியுள்ளது.** கடந்த 2011-ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை 0-4 என்ற கணக்கில் இழந்த இந்திய அணி முதலிடத்தை இழந்தது. அதன் பிறகு 5 ஆண்டுகள் கழித்து தற்போது மீண்டும் முதலிடத்தை பிடித்துள்ளது. தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான தொடரை கைப்பற்றியதன் மூலம் இந்திய அணி முன்னேற்றம் கண்டுள்ளது. தற்போது இந்தியா 110 தரவரிசை புள்ளிகளுடன் முதலிடத்திலும், 109 புள்ளிகளுடன் ஆஸ்திரேலியா 2-ஆவது இடத்திலும், தென் ஆப்பிரிக்க அணி 3-ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.

- **சர்வதேச மகளிர் இரட்டையர் டென்னிஸ் போட்டியின் தரவரிசையில் தனது ஜோடியான சானியா மிர்ஸாவுடன், முதலிடத்தில் இணைந்தார் சுவிட்சர்லாந்து வீராங்கனை மார்ட்டினா ஹிங்கிஸ்.**

- சிட்னியில் நடைபெற்ற சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சானியா மிர்சா - சுவிட்சர்லாந்தின் மார்டினா ஹிங்கிஸ் இணை வெற்றி பெற்றது

- **புனே ஐபிஎல் அணியின் பெயர் ரைசிங் புனே சூப்பர்ஜியண்ட்ஸ் (Rising Pune Supergiants), கேப்டனாக தோனி நியமனம்**. கடந்த 2013-ம் ஆண்டு நடைபெற்ற ஐபிஎல் போட்டியின்போது எழுந்த சூதாட்டப் புகாரைத் தொடர்ந்து, சென்னை சூப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் ராயல் ஆகிய இரு அணிகளுக்கு ஐபிஎல் போட்டியில் 2 ஆண்டுகள் பங்கேற்க தடை விதிக்கப்பட்டது. இதனையடுத்து புதிதாக சேர்க்கப்பட்டுள்ள புணே, ராஜ்கோட் அணிகள் தங்களுக்கான வீரர்களை ஏலம் வழியாகத் தேர்வு செய்தன.

- ஆறு அணிகள் பங்கேற்கும் 4-ஆவது **ஹாக்கி இந்தியா லீக் புவனேசுவரத்தில் நடைபெற்றது.**

- **பன்னிரெண்டு பந்துகளில் 50 ரன்கள்** விளாசி, இந்திய வீரர் யுவராஜ் சிங்கின் சாதனையை சமன்செய்தார் கிறிஸ் கெய்ல்.

- **முஷ்டாக் அலி டிராபி டி20 கிரிக்கெட்** தொடரில் உத்தரப் பிரதேச அணி சாம்பியன் பட்டம் வென்றது.

- திருவாரூரில் நடைபெற்ற மாநில அளவிலான கைப்பந்துப் போட்டியின் ஆடவர் பிரிவில் சென்னை அணியும், மகளிர் பிரிவில் காஞ்சிபுரம் அணியும் சாம்பியன் பட்டம் வென்றன.

- **மலேசிய மாஸ்டர்ஸ் கிராண்ட்ப்ரீ கோல்டு பாட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி.வி.சிந்து சாம்பியன் பட்டம் வென்றார்.**

- ஐசிசி ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தரவரிசையில் **இந்திய அணியின் தொடக்க வீரர் ரோஹித் சர்மா 5-ஆவது** இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

- **சையத் மோடி சர்வதேச பாட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டி** உத்தரப் பிரதேச மாநிலம், லக்னொவில் **26-01-2016** அன்று தொடங்கியது.

www.tnpscportal.in

- **ஆஸ்திரேலிய ஓபனில் சானியா-ஹிங்கிஸ் ஜோடி சாம்பியன்** : மெல்போர்னில் நடைபெற்று வரும் ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டியான ஆஸ்திரேலிய ஓபனில் நேற்று மகளிர் இரட்டையர் பிரிவு இறுதிச்சுற்றில் நம்பர் ஒன் வீராங்கனைகளான இந்தியாவின் சானியா மிர்சா, ஸ்விட்சர்லாந்தின் மார்ட்டினா ஹிங்கிஸ் ஜோடி 7வது இடத்தில் உள்ள செக்குடியரசின் அன்ட்ரியா, லூஸி ஹெரடெக்கா ஜோடியை எதிர்கொண்டது. இதில் சானியா ஜோடி 7-6 (1), 6-3 என்ற நேர்செட்டில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றது.

- **சர்வதேச பாட்மிண்டன் தரவரிசையில் இந்தியாவின் பி.வி.சிந்து ஓர் இடம் முன்னேற்றம் கண்டு 11-ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.**

- **நான்கரை ஆண்டுகளுக்கு பிறகு இந்திய அணி ஐசிசி டெஸ்ட் தரவரிசைப்பட்டியலில் முத லிடத்தை பிடித்தது.** நம்பர் ஒன் இடத்தில் இருந்த தென் ஆப்பி ரிக்கா இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை 1-2 என்ற கணக்கில் இழந்ததால் இந்திய அணி நம்பர் ஒன் இடத்துக்கு முன் னேறியுள்ளது.

- **டெஸ்ட் ஆல்ரவுண்டர்கள் தரவரிசையில் இந்தியாவின் அஸ்வின் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார்.** டெஸ்ட் பௌலர்கள் தரவரிசையில் அஸ்வின் 2-ஆவது இடத்திலும், ரவீந்திர ஜடேஜா 6-ஆவது இடத்திலும் உள்ளனர். இங்கிலாந்தின் ஸ்டூவர்ட் பிராட் முதலிடத்தில் உள்ளார்.

- **"தி கிங் ஆ..ப் கிளே'** - ஸ்பெயின் டென்னிஸ் வீரர் ர..பேல் நடாலின் . களிமண் ஆடுகளத்தில் எப்படிப்பட்ட பலசாலியையும் மண்ணை கவ்வ வைக்கும் அபரிமிதமான ஆற்றல் பெற்றவர் நடால். அதனால்தான் "தி கிங் ஆ..ப் கிளே' என்று அழைக்கப்படுகிறார்.

- **இந்திய துப்பாக்கிச் சுடுதல் வீராங்கனை ஹீனா சித்து**, பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் வரும் ஆகஸ்டு மாதம் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க தகுதி பெற்றுள்ளார்.

- **ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் ஜெர்மன் வீராங்க னையான ஏஞ்ஜலிக் ஹெர்பர் சாம்பியன் பட்டத்தை கைப்பற்றி னார்.**

நேற்று நடந்த இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸை 6-4, 3-6, 6-4 என்ற செட் கணக்கில் அவர் வீழ்த்தினார்.

❖

---------------------------------------------------

www.tnpscportal.in இணையதளத்தில் போட்டித்தேர்வுகளுக்கான தினசரி நடப்பு நிகழ்வுகள் தொகுத்து வழங்கப்படுகின்றன.

**இந்த நடப்பு நிகழ்வுகள் பற்றிய உங்கள் கருத்துக்களை mail@tnpscportal.in ல் தெரிவியுங்கள்.**

**உங்கள் முயற்சிகளில் வெற்றிபெற வாழ்த்துக்கள் !**

www.tnpscportal.in